புதன்பொய்கை

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 315

புதன்கிழமை
08 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50



## நாணய நிதியத்தின் இலக்கை தாண்டிப் பயணிப்பதே இலக்கு

### மூலோபாயத் திட்டங்கள் தயார் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 8
சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட பொருளாதார இலக்கைத் தாண்டிப் பயணிப்பதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம். அதற்கான மூலோபாயத் திட்டங்கள்

15

# படுகொலைகளின் சாட்சியமே செம்மணி என்புத்தொகுதிகள்!

### சர்வதேச விசாரணை நிச்சயம் அவசியம் தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து




யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 8

செம்மணிப்புதைகுழியில் இருந்துமீட்கப்படும் என்புக்கூடுகள், படுகொலைகளின் பிரதான சாட்சியங்களாகவே அமைந்துள்ளன. ஆதலால், இந்த விடயத்தில் சர்வதேச விசாரணை அவசியம் இவ்வாறு தேசிய சமாதானப் பேரவையின் நிர்வாக இயக்குநர் ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

15

## பொலிஸுக்குப் பயந்து ஓடியவர் ரயிலுடன் மோதுண்டு உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8
பொலிஸாரால் கைதுசெய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகத் தப்பியோடிய சந்தேக நபர், ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நாவற்குழியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
பல்வேறு வழக்குகளில் நீண்டகாலமாகத் தேடப்பட்டுவரும் சந்தேகநபர் ஒருவரை, கடந்த முதலாம் திகதியன்று கைது செய்வதற்கு பொலி

15



### அனுமதியின்றித் தேடுதல்கள்

## பொலிஸாரின் அத்துமீறலை எதிர்த்து சட்டத்தரணிகள் நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 8
யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணி ஒருவரின் வீட்டில், நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் பொலிஸார் தேடுதல் நடத்தியதைக் கண்டித்து வடக்கு கிழக்கு ரீதியாக சட்டத்தரணிகள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற காணி உறுதி மோசடிகள் தொடர்பில் பொலிஸார் தற்போது விசாரணை

15

## சுங்க வருவாய் எகிறியது!

கொழும்பு, ஒக். 8
சுங்கத்துறையின் வருவாய், கடந்த மாதம் உச்சம் பெற்றுள்ளது என்று சுங்கத்திணைக் களம்

15



பல்வேறு வழக்குகளில் தேடப்பட்ட

## வாள்வெட்டுச் சூத்திரதாரி ஹெரோய்னுடன் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 8
யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பல்வேறு வாள் வெட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்ட சந்தேகநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப்

15

### மோ.சைக்கிள் விபத்து;

## குடும்பத்தலைவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8
யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பகுதியில், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளானதில் படு

15

### யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள்

## ஹெரோய்ன் கடத்தமுயன்ற இருவர் பொலிஸால் கைது

### அவர்களில் ஒருவர் பெண்

யாழ்ப்பாணம், ஒக். 8
யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் ஹெரோய்ன் மற்றும் கஞ்சா கடத்த முயன்ற இருவர் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய கைது

15



### முச்சந்தி முரளி

'பெண்ணென்றவுடன இவையும் வாயை ஆவெண்டுகொண்டு காசைக் கட்டி ஏமாந்திருக்கினம் கண்டியளோ'

## வல்லிபுர ஆழ்வார் பெருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு!

யாழ்ப்பாணம், ஒக். 8
துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவம் கொடியிறக்கத்துடன் நேற்று செவ்வாய்க்கிழமை நிறைவு பெற்றுள்ளது.

15



### யாழ்ப்பாணத்தில் உள்ள

## பிரபல விடுதிகளின் பெயரில் தொடர்ச்சியாகப் பணமோசடி!

### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 8
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் விடுதிகளின் பெயர்களைப் பாவித்து, கும்பலொன்று பெருமளவு பண மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 07.10.2025 | திகதி 07.10.2025 | திகதி 07.10.2025 | திகதி 07.10.2025 | திகதி 07.10.2025 | திகதி 07.10.2025 | திகதி 07.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4217 | சீட்டிழுப்பு இலக்கம் 1284 | சீட்டிழுப்பு இலக்கம் 0243 | சீட்டிழுப்பு இலக்கம் 2323 | சீட்டிழுப்பு இலக்கம் 5975 | சீட்டிழுப்பு இலக்கம் 2005 | சீட்டிழுப்பு இலக்கம் 0091 |
| ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கினம் கன்னி | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து K | ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கினம் கும்பம் |
| | | | சுப்பர் இலக்கம் 04 | | | |
| வெற்றி இலக்கங்கள் 07 23 30 80 | வெற்றி இலக்கங்கள் 07 16 20 26 | வெற்றி இலக்கங்கள் 2 1 1 5 | வெற்றி இலக்கங்கள் 04 19 39 41 | வெற்றி இலக்கங்கள் 2 8 5 1 8 1 | வெற்றி இலக்கங்கள் 06 24 28 72 | வெற்றி இலக்கங்கள் 15 16 20 49 |
| விசேட எழுத்து T | | | | | விசேட எழுத்து K | |

# நிலையான நல்லிணக்கத்துக்கு பொறுப்புக்கூறல் மிக அவசியம்

## சுட்டிக்காட்டியது ஐரோப்பிய ஒன்றியம்

**கொழும்பு, ஒக்.8**

**நிலையான நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டியது மிக அவசியம் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சுட்டிக்காட்டியுள்ள ஐரோப்பிய ஒன்றியம், பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான பிரேரணை (60/L1/Rev.1) வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. புதிய பிரேரணை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி உரையாற்றிய சைப்பிரஸ் நாட்டின் பிரதிநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த 12 மாதகாலத்தில் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முன்னேற்றகரமான மறுசீரமைப்புகளை வரவேற்கின்றோம்.

நிலையான பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கும், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அவசியமான ஒத்துழைப்புகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

ஆயினும் பொறுப்புக்கூறல் விடயத்தில் இன்னமும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடைமுறைப்படுத்தும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் முக்கி யத்துவமானது.

நிலையான நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டியது மிக அவசியம் - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | வெற்றி வாரம் |
| 07.10.2025 | செவ்வாய்க்கிழமை | | 0683 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | | |
| O | 4 8 1 5 0 6 | | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 07.10.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 2949 | Y | 13 31 40 75 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 07.10.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| J | 11 44 50 80 | 5010 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 07.10.2025 | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0786 | 18 35 50 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 07.10.2025 | செவ்வாய்க்கிழமை | |
| கும்பம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 11 19 45 52 | 4661 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 07.10.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 23 | 03 14 22 46 | 2125 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 07.10.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 21 22 24 62 | 2775 |

## எலிக்காய்ச்சலால் 10 பேர் உயிரிழப்பு

அநுராதபுரம், ஒக்.8

எலிக்காய்ச்சலினால் இந்த வருடம் அநுராதபுரம் மாவட்டத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என மருத்துவமனையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு எலிக்காய்ச்சலினால், 743 நோயாளர்கள் பதிவாகியதாகவும் அவர்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பல்கலைக்கழக ஆட்சேர்ப்புக்கு அனுமதி வழங்கியது அமைச்சு

கொழும்பு, ஒக்.8

புதிய கல்வி ஊழியர்களை, உள்வாங்குவதற்கு பல்கலைக் கழகங்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நலக்க கலுவேவ தெரிவித்துள்ளதாவது:

ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது. கல்வி மற்றும் கல்விசாராப் பணியாளர்கள் தேவைகளுக்காக ஒவ்வொரு பல்கலைக்கழகமும் சமர்ப்பித்த கோரிக்கைகளுக்கு அமைவாக தற்போது அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலகத்தின்கீழ் செயற்படுமொரு குழுவால் பல்கலைக்கழகங்களுக்கு தேவையான ஆட்சேர்ப்பு கோரிக்கைகள் ஆராயப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக பல்கலைக்கழகங்கள் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மேற்கொள்ளவுள்ளன. அதற்கான நடைமுறைகள் நிறைவடைவதற்கு சிறிது அவகாசம் தேவையாக உள்ளது - என்றார். (எ-இ)



## தாஜுதீன் கொலை; விசாரணையால் அச்சத்தில் சிலர்!

கொழும்பு, ஒக்.8

ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பில் விசாரணைகள் தீவிரமடைந்துள்ளதால், சிலர் கலக்கமடைந்துள்ளனர். குறிப்பாக குறிப்பிட்ட ஒரு குடும்பம் பெரும் அச்சத்தில் உள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வசீம் தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இதனால் சிலர் கலக்கமடைந்துள்ளனர். இந்தக் கலக்கத்துக்கும் தாஜுதீன் கொலைக்குமிடையிலான தொடர்புகள் என்ன என்பது விசாரணைகள் மூலம் வெளிப்படும். கைது செய்யப்படுபவர்களின் வாக்குமூலங்களின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (க-இ)

## மின்சாரசபை ஊழியர்மீது யாழில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்.மாநகரசபையின் மின்சாரசபை ஊழியர் ஒருவர், கடமை நேரத்தில் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் மின் விளக்குத் திருத்த வேலைகளில் ஊழியர் ஈடுபட்டிருந்தார். இதன்போது அருகிலிருந்த வீடொன்றில் இருந்து வந்தவர், தனது மின்கம்பத்தில் உள்ள மின் விளக்கை முதலில் பழுதுபார்க்குமாறு ஊழியருடன் முரண்பாட்டில் ஈடுபட்டார். பின்னர் அவரைத் தாக்கியுள்ளார். காயமடைந்த ஊழியர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-20)

## ஊசிகளின் விலை அதிகரிப்பு; சிறுநீரக நோயாளிகள் பாதிப்பு

கொழும்பு, ஒக்.8

சிறுநீரக நோயாளிகளின் இரத்தச் சுத்திகரிப்புச் சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் ஏ.வி.எப். ஊசிகள் அரச மருத்துவமனைகளில் இல்லாததனால் அந்த ஊசிகளின் விலை தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் ரூபா 100 இலிருந்து ரூபா 760 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் சிறுநீரக நோயாளிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஊசிகளை ஒரு சில மருந்தகங்களில் மட்டுமே வாங்கமுடியும். சில பின்தங்கிய பகுதிகளில் உள்ள மருந்தகங்களில் இந்த ஊசிகள் ரூபா 1,200 வரை விற்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றாலை மின்திட்டத்துக்கான

# ஆய்வுக்காக மன்னார் வந்த குழு மக்கள் எதிர்ப்பால் திரும்பியது!

**மன்னார், ஒக்.8**

**காற்றாலைத் திட்டத்துக்கான மண் ஆய்வுக்காக மன்னாருக்கு வந்த குழு மக்களின் எதிர்ப்பால் திரும்பிச்சென்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்துள்ளது.**



பேசாலை தெற்குக் கடற்கரையில் மண் ஆய்வுக்காக இந்தக் குழு இயந்திரங்கள் சகிதம் வந்திருந்தது. அந்தப் பகுதி மக்கள் ஒன்றுகூடி அந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அந்த இடத்துக்குப் பேசாலைப் பொலிஸாரும் வந்திருந்த நிலையில், பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இயந்திரங்களை ஏற்றிவந்த உழவியந்திரதை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்களின் எதிர்ப்பை மீறி ஆய்வுகளை மேற்கொள்ளமுடியாததால் அந்தக் குழு திரும்பிச்சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-56)

## வாகனங்களின் விற்பனை தொய்வு

கொழும்பு, ஒக்.8

தற்போது வாகன விற்பனை குறைந்துள்ளது என்று வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வாகன இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டதுடன், சில மாதங்களில் பலர் வாகனங்களைக் கொள்வனவு செய்தனர் என்றும், தற்போது அது குறைந்துள்ளது என்றும் வாகன இறக்குமதியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். புதிய வாகனங்கள் சந்தைக்கு வருவதால், பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்கான தேவையும் சடுதியாகக் குறைந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)



நடப்பாண்டில்

## ஐஸ், ஹெரோய்ன் 3,100 கிலோ மீட்பு

கொழும்பு, ஒக்.8

இவ்வருடம் ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 1,248 கிலோகிராம் ஹெரோய்ன், 1,852 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் ஆகியன மீட்கப்பட்டதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப்பொலிஸ்அத்தியட்சகருமான மினுரசெனரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் உள்ள சகல பொலிஸ் பிரிவு மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் நாளாந்தம் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஐஸ், ஹெரோய்ன் தவிர்த்து 14,221 கிலோ கிராம் கஞ்சா, 29 கிலோ கிராம் கொக்கைன், 506 கிலோ கிராம் ஹசிஸ், 35 இலட்சத்து 79 ஆயிரத்து 339 போதை மாத்திரைகள் மற்றும் போதை வில்லைகளும் மீட்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் தொடர்பில் தகவல் அளிப்பதற்காக பொலிஸ்மா அதிபரால் இவ்வருடம் 0718598888 எனும் விசேட வட்ஸ் அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

முல்லைத்தீவில்

## ஐஸ் போதையுடன் பொலிஸ் கைது!

முல்லைத்தீவு,ஒக்.8

முல்லைத்தீவு - கொக்காவில் பகுதியில் வைத்து கிளிநொச்சி சிறப்பு அதிரடிப்படையினரால் 100 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு வெலிஓயாப் பொலிஸ் நிலையுத்தில் கடமையாற்றுபவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த அவரைச் சிறப்பு அதிரடிப்படையினர் சந்தேகத்தில் சோதனையிட்டபோதே அவரிடமிருந்து 100 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபரை மாங்குளம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-19,35)




## முட்டை விலை சடுதியாகச் சரிவு

கொழும்பு, ஒக்.8

முட்டையின் விலை குறைவடைந்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, வெள்ளை முட்டை 28 ரூபாவுக்கும் சிவப்பு நிற முட்டை 30 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)




## சிக்கினது சுறாக்கள் இல்லை, சூடையள் தான்!

பலநாள் கள்ளன் ஒருநாள் அகப்படத்தானே வேணும். கறுப்புக்கோர்ட்டைப் போட்டுக்கொண்டு, சிலர் செய்யிற கள்ளவேலையள் எப்பவோ அம்பலமானாலும், அவை தங்கட செல்வாக்கைப் பாவிச்சு, ஒளிச்சுப் பிடிச்சு விளையாடிக்கொண்டிருந்தவை. ஆனால் இப்ப அந்தச் செல்வாக்கு செல்லாக்காசா மாறினவுடன, எல்லாரும் பயத்தில நடுங்குகினமாம். அதுக்காக கறுப்புக்கோர்ட் போட்ட எல்லாரும் இப்பிடிக் கள்ளவேலை செய்யினமெண்டு சொல்லேலை. தங்கட மனச்சாட்சிக்கு நேர்மையா, சட்டத்தையும் சனத்தையும் காக்கிற கறுப்புக்கோர்ட்டுப் போட்ட கனபேர் இருக்கினம். எண்டாலும் அவையளுக்குள்ள இருக்கிற கள்ள உறுதிக் கறுப்பாடுகளால "ஒட்டு மொத்தமா எல்லாரும் அப்பிடித்தானோ?" எண்டுதானே சனம் நினைக்கும்.

ஆற்றையோ காணிக்கு ஆரையோ உரிமையாக்கி, கள்ள உறுதி முடிக்கிறதெண்டால் கட்டாயம் அதுக்கு கறுப்புக் கோர்ட் போட்டவை இல்லாமல் செய்யேலாது. அவையள் "இப்பிடிக் கள்ளவேலை செய்யிறதுக்கு நாங்கள் உடந்தையா இருக்கமாட்டம்" எண்டு கட்டன் ரைட்டாச் சொன்னால் ஒரு காணியையும் ஆரும் ஆட்டையைப் போடேலாது. ஆனால் இஞ்ச அப்பிடியோ நடக்குது? "இந்தக்காணியை என்ர பேருக்கு மாத்தித் தந்தால் உங்களுக்கு லட்சக்கணக்கில காசு தருவன்" எண்டு சொன்னவுடனேயே கறுப்புக்கோர்ட்டுக்குள்ள மனச்சாட்சியைப் புதைச்சு வைச்ச சிலர், உடனேயே கள்ளச் சாட்சியளைச் செற் பண்ணி, கள்ளக் கையெழுத்துகள், கள்ள ஆவணங்கள் எல்லாம் ரெடி பண்ணி, காதும் காதும் வைச்சமாதிரி அந்தக் காணிக்கு கள்ள உறுதி முடிச்சுக்குடுத்திடுவினம். கூடுதலா வெளிநாட்டில உள்ளவையின்ர காணியள், சண்டைக்காலத்தில குடும்பத்தோட செத்துப்போனவையளின்ர காணியள் தான் இவையின்ர முதல் இலக்கு. இப்பிடி எக்கச்சக்கம் காணியள் கள்ள உறுதி முடிச்சு கைமாறிட்டுது. முதலில காசுக்கு ஆசைப்பட்டுச் செய்த சில கறுப்பாடுகள், பிறகு இதையே தங்கட மெயின் தொழிலா மாத்திட்டினம். உதை எப்பிடியோ பொலிஸ்காரர் கண்டுபிடிச்சு,அவையைப் பிடிக்க சுருக்கு வளையமெல்லாம் போட்டு வைக்க, உடனேயே அவையள் ரணில் அரசாங்கத்தின்ர காலைப் பிடிச்சிட்டினம்., அப்ப சட்டமா அதிபரா இருந்தவர் ஒரு தமிழர். அவரும், ரணிலும் இந்தக் கறுப்பாடுகளைக் காப்பாத்துறதுக்காக ஒரு சுற்றுநிருபத்தை விட்டினம். "சட்டமா அதிபரின்ர உத்தரவு இல்லாமல் கறுப்புக்கோர்ட் போட்டவையைப் பிடிக்க ஏலாது" எண்டதுதான் அந்தச் சுற்றுநிருபத்தின்ர சுருக்கம்.

அதுக்குப் பிறகு திரும்பவும் தங்கட வேலையளை அந்தச் சில கறுப்பாடுகள் பழையபடி தொடங்கி, கள்ள உறுதியளைக் கச்சிதமா எழுதத் தொடங்கிட்டினம். எண்டாலும் திசைகாட்டி அரசாங்கத்துக்கு இப்பிடி ஒரு சுற்றுநிருபத்தால கள்ள உறுதி எழுதிறவை தப்புகினம் எண்டு ஆரோ போட்டுக்குடுக்க,உடனேயே அந்தச் சுற்றுநிருபத்தில இருந்த கன விசயங்களை திசைகாட்டி அரசாங்கம் கான்சல் பண்ணிப் போட்டுது. அதுக்குப் பிறகுதான் இப்ப கறுப்பாடுகள் மேல பொலிஸ் பாயத்தொடங்கியிருக்கு. இப்பிடிப் பொலிஸ் பாயப்போகுதெண்டு கறுப்பாடுகளுக்கு முதலே விளங்கிட்டுது. அதால சிலர் தலைமறைவாகிட்டினம். அதால கள்ள உறுதி எழுதிறவையளில சுறாக்கள் தப்பியோட, சூடையள் மட்டும்தான் இப்ப சிக்கியிருக்காம். கெதியில சுறாக்களும் சிக்குமெண்டு சொல்லுகினம். எல்லாம் நடந்தால்தான் உண்மை கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர் பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனு கூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவு கள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** சாதிக்கும்நாளாகஅமையும். வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள்.

**தனுசு:** மற்றவர்களால் மறைமுகத் தொல்லை களும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்ப தாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களை யும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சை யினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதி கரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறை வேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக் கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர்களால் சில பிரச்சி னைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப் பிடிப்பது நல்லது.

# நேர்த்திக்கான மாடுகள் ஆலயத்தால் ஏலம்

## மக்கள் அதிருப்தி

கிளிநொச்சி, ஒக்.8

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க உருத்திரபுரம் சிவன் ஆலயத் துக்கு பொதுமக்களால் நேர்த் திக்காக வழங்கப்பட்ட மாடு களை சட்டத்துக்குப் புறம்பாக, திருவிழாவுக்கு என நியமிக்கப் பட்ட குழுவினர் ஏலத்தில் விட் டுள்ளமை தொடர்பில் பொது மக்கள் அதிருப்தி வெளியிட் டுள்ளனர்.

குறித்த ஆலயத்துக்கு பல் வேறு நேர்த்திகடன் நிமிர்த்தம் பொதுமக்களால் வழங்கப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட மாடு களை எவ்வித அனுமதியும் இன்றி பல இலட்சங்களுக்கு ஏலத்தில் விட்டுள்ளனர்.

எனவே கரைச்சிப் பிரதேச செய லக அதிகாரிகள் குறித்த ஆல யத்தின் விடயத்தில் தலையிட்டு பொதுச்சபையைக் கூட்டி புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்து ஆலயத்தின் வழமையான செயற்பாடுகள் தடையின்றி இடம்பெற வழி சமைக்கவேண் டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தநிலையில் ஏலத்தில் விடப் பட்ட அனைத்து மாடுகளை யும் மீளவும் ஆலயத்துக்குப் பெற்றுக்கொள்ளுமாறு திரு விழாக் குழுவுக்கு கரைச்சிப் பிரதேச செயலகம் உத்தர விட்டுள்ளது. (ச-214)


# சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஒக்.8

சைவ வாழ்வியலில் திரு விளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திரு விளையாடல் புராணச் சிறப்புச் சொற் பொழிவுத், தொடர் 26 எதிர்வரும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர்

குருபூஜையை அடுத்து மாண வர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் செ. த. குமரனின் "வளையல் விற்ற படலம்" என் னும் சொற்பொழிவும், இடம் பெறும். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப் படவுள்ளன.

(ச-இ)



# கட்டுக்காரன் குடியிருப்புக்கு குடிதண்ணீர் விநியோகம்

மன்னார்,ஒக்.8

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, கட்டுக் காரன் குடியிருப்புக் கிராமத்துக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் நேற்று ஆரம்பிக்கப் பட்டது.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் நீண்ட கால மாகக் குடிதண்ணீர் பெறுவதில் பல்வேறு பிரச்சி னைகளை எதிர்கொண்டுவந்தனர். இந்த நிலை யில் மக்களின் கோரிக்கைக்கு அமைவாக இரா ணுவத்தின் 543 ஆவது காலாட்படையின் ஒழுங்க மைப்பில், மருத்துவர் ஜினஞ்சலா சானிக்க விஜயகுண சேகரவின் நிதி உதவியுடன் குடிதண் ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் இராணுவத்தின் 54 காலாட் படையின் கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் சந்திர அபயக்கோன், 54 ஆவது காலாட் படைப் பிரிவின் பொறுப்பதிகாரி, கட்டுகாரன்குடியிருப்புப் பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள் மற் றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (க-56,60)

# செல்லப்பா சுவாமி குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.8

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமி களின் மாதாந்த குருபூசை நிகழ்வு நல்லூ ரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவா ல யத்தில் இன்று புதன்கிழமை நடைபெற வுள்ளது.

காலை 9 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று, திருமுறை நற்சிந்தனைப் பாடல்கள் ஓதப் படும். தொடர்ந்து, 'சத்துரு ஜயம்' எனும் பொருள் பற்றி யாழ். பல்கலைக்கழக சமஸ் கிருதத்துறைத் தலைவர் பேராசிரியர் ம.பாலகைலாசநாதக் குருக்கள் உரையாற்ற வுள்ளார். (ச-25,66)

# நூல் வெளியீடு

வவுனியா, ஒக். 8

ஞானம் கலைக்கூடத்தின் ஏற்பாட்டில், வன்னியூர் கலா எழுதிய 'நிலவைத் தொலைத்த வானம்' நூல் வெளியீட்டு விழா வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற் றது. விழாவில் விருந்தினர்களாக கொழும்பு தேஜஸ்வராலயா கலைக்கூட இயக்குநர், ஸ்ரீமதி சுபாஷினி உட்படப் பல தமிழ்ப் புலமையாளர்கள் கலந்துகொண்டனர். (ச-25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# பொறுப்புக்கூறலே நல்லிணக்கத்தின் பாதை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள புதிய தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருக்கின்றது. சர்வதேச சமூகம் பல ஆண்டுகளாக வலியுறுத்திவரும் பொறுப்புக்கூறல் மற்றும் நீதிச்செயன்முறைகளை இலங்கை இன்னும் ஏற்கத் தயங்குவதென்பது நாட்டின் நல்லிணக்கப் பயணத்துக்கு - முன்னேற்றத்துக்கு மிகப் பெரிய தடையாகவே இருக்கும். 'ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்படும் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தால் இலங்கையர்களுக்கு எந்தவித நன்மையும் இல்லை' என்று ஜெனிவாவில் ஐ.நா.வுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி கூறியிருப்பதும் ஏற்புடையதல்ல. நீண்டகால உள்நாட்டுப்போரின் விளைவாக ஆயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்ட இந்த நாட்டில், பாதிக்கப்பட்ட மக்களின் துயரம் இன்னும் நீங்காத நிலையில், உண்மையை வெளிக்கொணர்வதும், குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறலுக்குட்படுத்துவதும் மட்டுமே உண்மையான நல்லிணக்கத்துக்கான பாதையாக இருக்கும். அந்தவகையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நடைமுறைப்படுத்தும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் முக்கி யமானது.

தென்னாபிரிக்கா, சிலி, ஆர்ஜென்டினா போன்ற நாடுகள் தமது கடந்தகால அநீதிகளை ஒப்புக்கொண்டு, உண்மைக்குழுக்கள் மற்றும் மாற்றீட்டு நீதிமுறைகள் வழியாகச் சமூக நல்லிணக்கத்தை அடைந்துள்ளன. ஆனால் இலங்கை, கடந்த பல ஆண்டுகளாக, உண்மை வெளிப்படுத்தல் மற்றும் நீதிச்செயற்பாடுகளைத் தவிர்த்து, பொறுப்புக்கூறலைத் தடுக்கின்றது. இது நாட்டின் சர்வதேசநம்பிக்கையையும், உள்நாட்டு இன ஒற்றுமையையும் நிச்சயம் குலைக்கும். கடந்தகால அரசாங்கங்களின் இந்தப்போக்கால் இலங்கை நெருக்கடிகளைச் சந்திந்திருந்த நிலையிலும், தற்போதைய அரசாங்கமும் அதேநிலைப்பாட்டைக் கையிலெடுத்துள்ளமை துரதிர்ஷ்டவசமானதே. குறுகியகால அரசியல் இலாபங்களுக்காகவும், பௌத்த மேலாதிக்க சிந்தனையைக்கொண்ட சில வட்டாரங்களின் ஆதரவைப் பெறுவதற்காகவும் அரசாங்கம் செயற்பட்டால், அது நாட்டின் நீண்டகால நலனுக்கு பேரிழப்பாகவே அமையும்.

இவ்வாறான தீர்மானங்கள் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்காக அல்ல, மாறாக, நாட்டின் நீதி, சமத்துவம், மனித உரிமை மற்றும் நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்காகவே நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை இலங்கை அரசு புரிந்துகொள்ளவேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிராகரித்து முரட்டுத்தனமாக எதிர்ப்பதற்குப் பதிலாக, அதில் உள்ள நியாயபூர்வமான சுட்டிக்காட்டுதல்களை ஏற்றுக்கொண்டு, அதன்படி செயன்முறைகளை வலுப்படுத்துவதுதான் அரசாங்கத்தின் நாகரிகப் பொறுப்பாகும். கடந்தகால அநீதிகளுக்கான பொறுப்புக்கூறல் செயன்முறைகள் இல்லாமல், இனங்களுக்கிடையிலான நம்பிக்கை உருவாகாது. நம்பிக்கை இல்லாத இடத்தில் நல்லிணக்கம் உருவாவதற்கு எவ்விதச் சாத்தியமும் இல்லை.

இலங்கை அரசாங்கம் உண்மையில் நாட்டின் நலனையே முதன்மையாகக் கருதினால், சர்வதேச சமூகத்துடன் மோதுவதற்குப் பதிலாக இணைந்து செயற்படவேண்டும். அரசியலுக்கு அப்பால், பொறுப்பை உணர்ந்து செயற்படுதல் மட்டுமே இலங்கையின் எதிர்காலத்தை நல்லிணக்கம், நீதி, மற்றும் நிலையான சமாதானம் நிறைந்த ஒன்றாக மாற்றும். பொறுப்புக்கூறலே நல்லிணக்கத்தின் பாதை. அதைத் தவிர்க்கும் ஒவ்வொரு முடிவும் நாட்டை மீண்டும் பின்னோக்கி இழுக்கும் என்பதை அரசாங்கம் உணரவேண்டியது கட்டாயம்.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





நாளொரு நல்வார்த்தை

தனிமையாக நிற்பவனே
உலகில் தலைசிறந்த வலிமையுள்ள மனிதன்.

—ஹென்றிக் இப்சன்




# எயிட்ஸ் தொற்று அபாயம் இலங்கையில் அதிகரிப்பு!




கொழும்பு, ஒக்.8

**இலங்கையில் 15 முதல் 29 வயதுக்குட்பட்டவர்களிடம் எயிட்ஸ் தொற்று அதிகரிக்கும் அபாயம் உள்ளது என்று சுகாதாரத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் எயிட்ஸ் தொற்றாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எயிட்ஸ் தொற்றுக் குறைந்த நாடாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டாலும், கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள எயிட்ஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை கவலையளிக்கும் வகையில் உள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். 2021ஆம் ஆண்டு 411 தொற்றாளர்களும், 2022ஆம் ஆண்டு 607 தொற்றாளர்களும், 2023ஆம் ஆண்டு 697 தொற்றாளர்களும், 2024 ஆம் ஆண்டு 824 தொற்றாளர்களும் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாவர். எயிட்ஸ் தொற்றுக்குள்ளான ஒருவருடன் உடலுறவு கொள்ளுதல், ஊசிகள் பயன்பாடு, கர்ப்பிணிக்கு எயிட்ஸ் தொற்று இருத்தல் என்பவற்றால் எயிட்ஸ் தொற்றுப் பரவும் சாத்தியங்கள் உள்ளன. இலங்கை முழுவதும் 41 பாலியல் நோய்ச் சிகிச்சை மையங்களில் எயிட்ஸ் தொற்றாளர்களுக்கு இலவச சிகிச்சை வழங்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# தம்பதியர் கொலை!

கொழும்பு. ஒக்.8
ஹுங்கம வடிகலப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கூர்மையான ஆயுதங்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் தம்பதியினர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். 28 வயதுடைய கணவரும் அவரது மனைவியுமே இதில் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் தம்பதியினர் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)



# மின்னல் தாக்கி மீனவர் பலி!

கொழும்பு; ஒக்.8
மீன்பிடிப் படகில் மின்னல் தாக்கியதில் மீனவரொருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மக்கோன, தியலகொடப் பகுதியைச் சேர்ந்த ஹெட்டியாராச்சி திஷாந்த என்ற 41 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# தங்கம் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.8
கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நாட்டில் தங்கத்தின் விலை 8 ஆயிரம் ரூபா அதிகரித்துள்ளது. நேற்றைய தங்க நிலைவரப்படி, 22 கரட் பவுண் தங்கத்தின் விலை 2 இலட்சத்து 90 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரித்துள்ளது. இது கடந்த வெள்ளிக்கிழமை 2 இலட்சத்து 83ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. கடந்த வாரம் 3 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாவாக இருந்த 24 கரட் பவுண் தங்கத்தின் விலை இன்று 3 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாவாக உயர்ந்துள்ளது. (ச-இ)



# யானை - மனிதன் மோதல் உயர்வு!

கொழும்பு, ஒக்.8
இலங்கையில் நடப்பாண்டில் மனித - யானை மோதலில் இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 427 பேர் யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். அத்துடன் இதுவரை 314 யானைகளும் உயிரிழந்துள்ளன என்று தரவுகள் தெரிவிக்கின்றன. பெரும்பாலான யானைகள் கிழக்கு மாகாணத்தில் உயிரிழந்துள்ளன. 2024ஆம் ஆண்டில் மோதலில் மொத்தம் 388 யானைகள் இறந்தன என்றும், 155 மனித இறப்புகள் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

நாளை

வியாழக்கிழமை - புரட்டாதி 23

09.10.2025

சுபநேரம் : 07.32 - 09.02
ராகுகாலம் : 01.32 - 03.02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகா மீது எதற்காக போர்க்குற்றச்சாட்டில்லை?

## மஹிந்த தரப்பினர் கேள்வி

சரத் பொன்சேகாவைத் தவிர ஏனைய படைத்தளபதிகளுக்கு போர்க்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள் ளன. பயணத்தடைகள் விதிக்கப்படுகின்றன.

ஆனால் பொன்சேகாவுக்கு எதிராக ஏன் போர்க்குற்றச்சாட்டுகள் இல்லை? இது பற்றி நாட்டு மக்கள் சிந்திக்க வேண்டும் என்று மஹிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளரான சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில், இறுதிப்போரை முடிப்பதற்கு முன்னர் மஹிந்த ராஜபக்சவால் போர் நிறுத்தம் வழங்கப்பட்டது என சரத்பொன்சேகா கூறி வருகின்றார். இது பொய்யான அறிவிப்பாகும். இவ்வாறு போர் முடிவுக்கு வரப்போகின்றது என்பது தனக்குத் தெரிந்திருக்குமானால் முள்ளிவாய்க்கால் போர் நடக்கும் போது பொன்சேகா ஏன் சீனா சென்றார்? ஆயுதம் கொள்வனவு செய்வதற்காகவே அவர் அங்கு சென்றிருந்தார். போர் முடியப்போகின்றது என்பது உறுதியாக தெரிந்திருந்தால் நாட்டிலேயே இருந்திருக்கலாம் தானே?போர் முடியும் என அவர் நினைக்க வில்லை. அவ்வாறு எண்ணி இருந்தால் அவர் நாட்டில் இருக்கவேண்டும். ஏன் சீனா சென்றார் என்பது பற்றி அவர் தெளிவுபடுத்த வேண்டும். படையினரைக் காட்டிக்கொடுத்ததாலேயே பொன்சேகாவுக்கு ஐரோப்பிய நாடுகளால் பயணத்தடை விதிக்கவில்லை. போர்க்குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவில்லை - என்றார்.

(கு-44)


பாராட்டி வாழ்த்துகின்றோம்





எமது பாடசாலையின் அதிபராக கடமையாற்றி இன்றயதினம் (08.10.2025) சாவகச்சேரி கல்வி வலய கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுக்செல்லும் எமது அதிபர்

**திரு. நடராஜா ஜெயரூபன்**
**(SLPS - II, Com Trd)**

அவர்கள் மென்மேலும் பல பதவி உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பழைய மாணவர்கள் சங்கம்
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்

(CS/59587) J-1

# நீதிக்குப் போராடி உயிர்நீத்த மனோகரனுக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம். ஒக்.8

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்காக நீதிகோரிப் போராடி அமரத்துவமடைந்த மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரனுக்கு அஞ்சலி செலுத்தி நினைவுகூரும் வகையில் மக்கள் செயல் தன்னார்வ அமைப்பின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட "கானல் நீதி" நிகழ்வு யாழ். தந்தை செல்வா மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அரசியல் செயற்பாட்டாளர் இ.ரஜீவகாந், அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன், சிரேஷ்ட பத்திரிகையாளர் அ.நிக்சன், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் கலாநிதி தி. விக்கினேஸ்வரன், ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் சட்டத்தரணி சிறீநாத் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

அத்துடன் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த்தேசிய மக்கள்முன்னணியின் பிரசாரச்செயலாளர் சட்டத்தரணி ந.காண்டீபன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், முன்னாள் போராளிகள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25,40,66)

## பரிசளிப்பு விழா

யாழ்., ஒக்.8

ஊரெழு கணேச வித்தியா சாலையில் பரிசளிப்பு விழா முதல்வர் இரா.ஜெயக்குமார் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பாகி நடைபெறும்.

விழாவில் பிரதம விருந்தினராக வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் திரு மதிராஜமல்லிகை சிவ சுந்தரசர்மா, சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.கண்ணதாசன், வலி. கிழக்குப் பிரதேச சபை உரும்பிராய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி சி.சைலேஸ்வரன், கௌரவவிருந்தினர்களாக யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் து.துசியந்தன், பிரசாத் நகையக உரிமையாளர் ச.உதயகுமார், பூரண ஆச்சிரம நிர்வாகி லாசரஸ் நடராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ச-25)


| 10ம் ஆண்டு நினைவலைகள் | 9ம் ஆண்டு நினைவலைகள் | 2ம் ஆண்டு நினைவலைகள் |
|---|---|---|
|  |  |  |
| தோற்றம் 27.07.1960 மறைவு 09.08.2015 | தோற்றம் 12.03.1966 மறைவு 21.06.2016 | தோற்றம் 19.09.1962 மறைவு 01.10.2023 |
| அமரர் சின்னத்துரை இராதாக்கிருஷ்ணன் | அமரர் சின்னத்துரை பரமேஸ்வரன் | அமரர் சின்னத்துரை சிறீஸ்கந்தராசா |
| திதி: தசமி 20.07.2025 | திதி: பிரதமை 11.07.2025 | திதி: துதியை 08.10.2025 |

ஒரு குடும்பப்பாச விளக்குகளாய்
ஒரு கூட்டுக் கிளிகளாக
எம்மோடு வாழ்ந்து
எம்மை எல்லாம் தவிக்க விட்டு
விண்ணுலகு புகுந்த உங்கள்
மூவரையும் நாம் எண்ணாத நாளில்லை
உங்கள் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சண்டிலிப்பாய் வீதி
பண்டத்தரிப்பு

நீங்காத்துயருடன்
அக்காமார்



**வேலையாட்கள் தேவை**


யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் சுற்றுலாத்துறையில் அனுபவமுள்ள பட்டம் முடித்த பெண் வேலையாட்கள் தேவை.
System Operating தெரிந்திருத்தல் வேண்டும். தமிழ், ஆங்கிலத்தில் பேசத்தெரிந்திருத்தல் வேண்டும்.
35 வயதிற்குட்பட்டவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-
**075 246 5858**

(CS/59586) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதுமலை அம்மன் ஆலயத்தின் தொன்மையைப் பாதுகாக்கவும்!



## பிரதேச மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

**சுதுமலை அம்மன் ஆலயத்தின் பழைமையான கட்டடம் இடித்தழிக்கப்பட்டுள்ளது. இதனால் பழைய ஆதாரங்கள் இல்லாமற்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்து பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சீரணி நாகபூஷணி கோவிலிலிருந்து பேரணியாகச் சென்ற மக்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வரை சென்று போராட்டத்தில் ஈடுபட்டு பின்னர் பிரதேச செயலக பதவி நிலை அதிகாரி ஒருவரிடம் கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

பழைமையான கட்டடம் ஆலயப் புனரமைப்புக்காக இடித்தழிக்கப்பட்டுள்ளது. இதனால் பழைய ஆதாரங்கள் இல்லாமல் போகும் அபாயம் உள்ளது. புனர் நிர்மாணத்தை நாங்கள் தடுக்கவில்லை தேவையான விடயத்தை புனர்நிர்மாணம் செய்துவிட்டு ஆலயத்தின் பழைமையைப் பேணிப்பாதுகாக்கவேண்டும். கட்டட நிர்மாணத்துக்காக ஊர் மக்களிடம் நிதி சேகரிக்கின்றனர். ஆனால் ஊர்மக்களிடம் அபிப்பிராயம் கேட்பதில்லை. நிர்வாகத்துக்குள் உள்ளவர்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டும் பட்சத்தில் அவர்கள் நிர்வாகத்தில் இருந்து நீக்கப்படுகின்றனர். பழைய கட்டடத்தை இடிக்கக்கூடாது என நாங்கள் ஏற்கனவே பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்திருந்தோம். பிரதேச செயலகத்தின் துணையுடனேயே இந்தக் கட்டடம் இடிக்கப்பட்டது. எனவே இனி இடம்பெறுகின்ற நிர்மாணப் பணிகள் அரச திணைக்களம் ஒன்றின் கண்காணிப்பின் கீழேயே இடம்பெறவேண்டும் - என்றனர். (க-27)

# புலிகளைத் தப்பவைக்க முயன்ற மஹிந்தவை விசாரிக்கவேண்டும்

## சரத் பொன்சேகா வலியுறுத்து

கொழும்பு, ஒக்.8

பிரபாகரன் உள்ளிட்ட புலித்தலைவர்களைத் தப்பிக்க வைப்பதற்காக இறுதிக்கட்டப்போரின்போது மஹிந்த ராஜபக்சவால் 48 மணிநேர போர் நிறுத்தம் வழங்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும். அத்துடன், 2005ஆம் ஆண்டு புலிகளுக்கு நிதி வழங்கப்பட்டமை தொடர்பாகவும் விசாரணை அவசியம். இதற்காக ஜனாதிபதி விசாரணைக்குழு வொன்று அமைக்கப்பட வேண்டும்." இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இராணுவத்தினர் தொடர்பில் ராஜபக்சக்கள் தற்போது அதிக அக்கறையுடன் கதைக்கின்றனர். என்னை மஹிந்த ராஜபக்ச சிறை வைத்ததுகூட தவறு என நாமல் ராஜபக்ச கூறிவருகின்றார். பிரபாகரன்கூட எமது குடும்பத்தினரை இலக்குவைக்கவில்லை. நாம் உக்கிர போரில் ஈடுபட்டிருந்த தருணத்தில்கூட படையினரின் குடும்பத்தை பிரபாகரன் இலக்குவைக்கவில்லை. ஆனால் ராஜபக்சக்கள் எனது குடும்பத்தினரைக்கூட விட்டு வைக்கவில்லை. எனக்குக்கீழ் வேலை செய்த படையினர் ஓய்வூதியம் இன்றி வெளியேற்றப்பட்டனர். அவர்கள் வெளியே சென்ற பிறகுகூட அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு இடமளிக்கப்படவில்லை. தடையேற்படுத்தப்பட்டது. இதனால் சிலர் மாரடைப்பு வந்து மரணித்துவிட்டனர். இப்படி செய்த ராஜபக்சக்கள்தான் தற்போது படையினருக்காக குரல் கொடுப்பதாகக் கூறிக்கொள்கின்றனர். 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதிமுதல் பெப்ரவரி மாதம் முதலாம் திகதிவரை 48 மணிநேரம் போர் நிறுத்தம் வழங்கவேண்டும் என்று மஹிந்த ராஜபக்ச அழுத்தம் கொடுத்தார். அந்தக் காலப்பகுதியில் நாம் முல்லைத்தீவை பிடித்துவிட்டோம். புதுகுடியிருப்பையும் மும்முனையில் சுற்றிவளைத்துவிட்டோம். இன்னும் 10 கிலோ மீற்றர்வரைதான் பிடிக்கவேண்டியிருந்தது. இதற்காகத்தான் இரண்டரை வருடகாலம் போர் நடந்தது. 4 ஆயிரத்து 500 வரையான படையினரை இழந்திருந்தோம்.

அந்தப் போர் நிறுத்தத்தை மஹிந்த ராஜபக்ச வழங்கி இருக்காவிட்டால் 2009 மார்ச் நடுப்பகுதியில் போரை முடிவுக்குக் கொண்டுவந்திருப்போம். போர் நிறுத்தம் வழங்கப்பட்ட பிறகு புலிகள் எம்மைத் திருப்பி தாக்கினர். நாம் ஆயுதங்களை கீழேவைத்திருந்தோம். ஐந்துகிலோ மீற்றர்வரை பின்னால் வரவேண்டி ஏற்பட்டது. பெருமளவு ஆயுதங்கள் அழிக்கப்பட்டன. 500 வரையான படையினரை இழந்தோம்.

எதற்காக போர் நிறுத்தம் வழங்கப்பட்டது? பிரபாகரன் உள்ளிட்ட புலித் தலைவர்களை தப்பிக்கவைப்பதற்காகவே இது நடந்திருக்கும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எம்மைத் தாக்கலாம் என பிரபாகரன் சிந்தித்து தாக்குதல் நடத்தினார். அவர் வாய்ப்பைத் தவறவிட்டிருந்தார். போர் முடிவடையப்போகின்றது எனத் தெரிந்தும் எதற்காக போர் நிறுத்தம் வழங்கப்பட்டது? மஹிந்தவின் இந்தத் தேசத்துரோகச் செயல் தொடர்பில் இந்த அரசாங்கத்துக்கு முதுகெலும்பிருந்தால் நிச்சயம் விசாரணை நடத்தவேண்டும். 2005 ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்களின் வாக்குகள் ரணிலுக்கு விழுவதைத் தடுக்கும் நோக்கில் மஹிந்த தரப்பு பணம் வழங்கியது. அந்த பணத்தை வைத்தே கடற்புலிகளுக்குக் கப்பல் கொள்வனவு செய்யப்பட்டது. புலிகளுக்குப் பணம் வழங்கப்பட்டமை தொடர்பில் பஸில் ராஜபக்சவும் என்னிடம் தெரிவித்திருந்தார். எனவே, இதுதொடர்பாகவும் விசாரணை நடத்தப்படவேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழு அல்லது உயர்மட்டக்குழுவொன்றை அமைத்தேனும் விசாரணை நடத்தப்பட வேண்டும்-என்றார். (எ-44)

# பொலிஸாரின் சட்டவிதிமீறலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டம்

## மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.8

பொலிஸாரின் சட்டவிதிமுறைகளை மீறிய செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மாத்திரமே போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதே ஒழிய வழக்கு நடவடிக்கைகளில் தலையிடும் நோக்கத்திலோ அல்லது சட்டத்தரணிகளுக்கு எதிராப் பொலிஸார் வழக்கிடக்கூடாது என்ற நிலைப்பாட்டின் அடிப்படையிலோ இல்லை எனத் தெளிவுபடுத்துவதாக மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தால் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில்,

நாங்கள் வழக்குகளில் தலையிடும் நோக்கில் இந்த பகிஸ்கரிப்பைச் செய்யவில்லை.

சட்டத்தரணி ஒருவரின் இல்லத்துக்குச் சென்றிருந்த யாழ்ப்பாண விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் குறித்த சட்டத்தரணியின் இல்லத்தில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட காரணங்களுக்காக குறித்த சட்டத்தரணி வெளிமாவட்டம் ஒன்றிற்குச் சென்றிருந்தார் என குறித்த சட்டத்தரணியின் குடும்ப அங்கத்தவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிடியாணையையோ அல்லது தேடுதல் ஆணையையோ சமர்ப்பிக்காத பொலிஸார் குறித்த சட்டத்தரணியின் இல்லத்திற்குள் சட்ட விதிமுறைகளை மீறி உள்நுழைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தவகையில் பொலிஸாரின் சட்ட விதிமுறைகளை மீறிய செயற்பாட்டினைக் கண்டித்தும் எதிர்காலத்தில் பொலிஸார் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்பதனை வலியுறுத்தியுமே நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து மாத்திரம் விலகி பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்- என்றுள்ளது. (ச-27)

# சிங்களப் பாடநெறி சான்றிதழ் வழங்கல்



யாழ்ப்பாணம், ஒக்.8

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் நிகழ்நிலை மூலம் 150 மணித்தியால இரண்டாம் மொழிச் சிங்களப் பாடநெறியினைப் பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்.போதனா மருத்துவமனை தாதிய பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கிவைத்தார். (ச-25, 9)



# வடக்கு பிரதிப் பிரதம செயலாளராக ராஜினி ஜெயராஜ் நியமிப்பு

வடமாகாணத் திட்டமிடல் பிரதிப் பிரதம செயலாளராக திருமதி ராஜினி ஜெயராஜ் நேற்று செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்டார். அவருக்கான நியமனக்கடிதத்தை வடக்கு ஆளுநர் நா.வேதநாயகனும், ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலனும் இணைந்து வழங்கிவைத்தனர். (ச-25,9-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிறுவர் தினத்தில் கற்றல் உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக்.8
தேசிய சிறுவர் தினத்தையொட்டி விளையாட்டு உபகரணம் மற்றும் கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் உறக்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உபகரணங்களை வழங்கிவைத்தார். (ச-25)



## பிரிவுபசார நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.8
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவர்களின் பிரிவுபசார நிகழ்வு கல்லூரியின் பதில் அதிபர் மயூரன் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நடைபெற்றது. இதன்போது மாணவர்களது கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-41-27)

## மதிப்பளிப்பும் பரிசளிப்பும்



முல்லைத்தீவு, ஒக்.8
முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள உடையார்கட்டு அ.த.க. பாடசாலையில் 2025ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பும் பாடசாலையின் ஆண்டு பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றன.
பாடசாலை முதல்வர் செல்வறஞ்சினி பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி நிறைவேற்றுப் பொறியியலாளர் க.நித்தியானந்தன், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்புக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.பாஸ்கரன், உடையார்கட்டு மகாவித்தியாலய அதிபர் சி.ஏகாம்பரம், கௌரவ விருந்தினர்களாக முல்லை வலய ஆசிரியஆலாசகர் கே.நவநீலன், கே.ரகு உதயகுமார், கிராம சேவையாளர் க.கவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-41-19)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்த திருவாசகம் முற்றோதல் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. (ச-66,40)





கல்வாரித் திருச்சபையின் ஹாப்பி கோம் திட்டத்தினரால் 'பெறுமதியான முத்து' எனும் தலைப்பில் சிறுவர்தின நிகழ்வுகள் கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. (ச-25, 214)

கிளிநொச்சி றோயல் கல்வி நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி கல்வி நிலையத்தின் நிர்வாகி எஸ்.குமார் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. (ச-41,214)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்கான வலிமையான கொள்கை மனிதனின் தேர்விலேயே இருக்கின்றது.

- ஜோர்ஜ் எலியட்

# கல்வியில் உயர்வதற்கு சுயகற்றலை ஊக்குவித்தல்




பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி

கல்வி என்பது ஒரு இனத்தின் விடுதலைக்கு வித்திடுவது. இங்கு கல்வியானது இனத்தின் அறிவு, ஒழுக்கம், நாகரிகம், பொருளாதாரம், சமத்துவம், ஆற்றல்கள், ஆளுமை சார்ந்த வெளிப்பாடாகக் காணப்பட்டதனால் தான் தமிழர் தனித்துவம் மிக்கவர்களாக எழுச்சி பெற்றார்கள். கல்வி எனப்படுவது மிகப் பரந்து விரிந்த செறிவான கருத்தினைக் கொண்டபோதும், அது நாட்டுக்கு நாடு, கலாசாரத்துக்குக் கலாசாரம், காலத்துக்குக் காலம் மாறுபட்டதாகவும் மாற்றங்களுக்கு உள்ளாகியும் வந்துள்ளது. இருந்தபோதும், 'லெஸ்டர் ஸ்மித்' என்ற அறிஞர், 'கல்வி என்றால் என்னவென்று ஆராயும் முயற்சியானது வெறுமனே காலத்தை வீணாக்கும் முயற்சி' என்று குறிப்பிட்டுள்ளார்.

யுனெஸ்கோவின் அறிக்கை கல்வியின் முக்கியத்துவத்தை மேலோங்கச் செய்தபோதும், அது வளர்ந்த நாடுகளில் உச்சப்பயனைக் கொடுப்பதுடன் பயனுறுதி மிக்கதாகக் காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில், பயனடையமுடியாத நிலையில், உயர்கல்வியில் சாதித்தவர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை காணப்படுகிறது. அறிவுக்காகக் கற்றல், ஆளுமைக்காகக் கற்றல், ஆற்றல் வெளிப்பாட்டிற்கான கற்றல், ஆளிடைத் தொடர்புக்கான கற்றல், வாழ்க்கைக்கான கற்றல் என்ற முறைகள் மாறி, எமது தேசத்தில் வளர்க்கப்படும் கல்வியானது பரீட்சைக்கான வெறும் புள்ளிகளைப் பெறும் கல்வியாக மாறிவருகின்றது. அதனை ஊக்குவிக்கும் வகையில் பாடசாலைகள் செயற்படுவது வேதனையானது.

## துறைசார்ந்த கற்கைக்கு

முதலில், தமது பிரதேசத்தில் எதற்கு வேலைவாய்ப்பு அதிகம் உள்ளது, எந்தத் துறையில் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளது, புதிய வாய்ப்புகள் எங்கு உருவாகின்றன என்ற தகவல்கள் தெரியவேண்டும். அப்பொழுதுதான் துறைசார்ந்த கற்கைநெறியைத் தெரிவுசெய்ய இலகுவாக இருக்கும். வேலைவாய்ப்பு வெற்றிடங்களை நோக்கி எமது கல்வியை நகர்த்தாவிட்டால், கல்வி வீழ்ச்சியை நோக்கியே செல்லும் என்பது காலம் கடந்த உண்மை. நாம் அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைப்பது போல, பாடத்தெரிவில் தவறு விட்டுக்கொண்டே வருகின்றோம். மருத்துவத் துறைக்கு அடுத்தபடியாக, பல துறைகளில் வெற்றிடங்கள் அதிகமாக உள்ளபோதும், அறிவியல் துறையில் சித்தியடைவோர் குறைந்துள்ளமையால் ஏனைய மாகாணங்களுக்கு அது சந்தர்ப்பமாக அமைகின்றது.


கலைத்துறை நவீனமயப்படுத்தப்படவில்லை. கலைத் துறைப் பாடத்தெரிவு ஆசிரியர்களுக்கு ஏற்றவகையில் அமைந்துள்ளதோடு, பட்டம் பெற்றோர் வேலைவாய்ப்பு இல்லாது நீண்டகாலம் காத்திருப்பது கலைத்துறையின் வீழ்ச்சிக்குக் காரணமாகின்றது. எனவே, பிள்ளைகளுக்கு வீட்டுச் சூழலைக் கற்றல் சூழலாக மாற்றி, சுயகற்றலுக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும். இன்றைய நிலையில், மாணவர்கள் ஆறு மணிநேரம் பாடசாலையிலும், பாடசாலை முடிந்தவுடன் தனியார் கல்வி நிலையத்திலும், பின்னர் தனிப்பட்ட வகுப்புகளிலும் அலைந்து திரிந்து, தூக்கத்துக்காக மட்டுமே வீட்டைப் பயன்படுத்துகிறார்கள். இங்கு மாணவர்களுக்கான சுயகற்றல் இல்லாது போய்விடுகிறது. இதனால், துறைசார்ந்த ஆற்றல் புலமை கல்வியில் இல்லாது போகின்றது. அத்துடன், சிந்தனைத்திறன் குறைந்து, செயற்றிறனின் வேகம் குறைகின்றது.

> **எமது தேசத்தில் வளர்க்கப்படும் கல்வியானது பரீட்சைக்கான வெறும் புள்ளிகளைப் பெறும் கல்வியாக மாறிவருகின்றது. அதனை ஊக்குவிக்கும் வகையில் பாடசாலைகள் செயற்படுவது வேதனையானது.**

## அதிகரிக்கும் இடைவிலகல்

தொலைக்காட்சி, திறன்பேசி போன்ற நவீன சாதனங்களின் அதிகப்படியான பயன்பாடு, போதைப்பொருள் பயன்பாடு, வறுமை, கல்வியில் வெறுப்பு, வீட்டுச்சூழல் போன்ற பல காரணங்கள், இன்றைய மாணவர்களின் கல்வியில் இடைவிலகலை ஏற்படுத்துகின்றன. கல்விக்காகப் போராடிய இனம், இன்று கல்வி கற்பதற்குத் திண்டாடுகின்றது. அதற்குச் சிறந்த திட்டமிடல், கல்விப்பொறிமுறை, பெற்றோரின் விருப்புவெறுப்பு, மாணவர்களின் சுமை, பொருளாதாரம், ஊட்டச்சத்துக்குறைபாட்டு நோய்கள், நவீன தொழில்நுட்பச் சாதனங்கள், பொருத்தமான வேலைவாய்ப்பு என்பன சரியான முறையில் சீர்செய்யப்படவேண்டும். இல்லையேல், தெரிந்த இலக்கும் மறைந்து போகும். எனவே, வீட்டுச் சூழலைப் பிள்ளைகளுக்கு ஏற்றவகையில் மாற்றியமைக்க வேண்டியது அவசியம். பெற்றோர் பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்கி, மனம் திறந்து பேசுங்கள். அவர்களின் எண்ணங்களைச் செவிமடுங்கள். நம்பிக்கையை ஏற்படுத்துங்கள். சமூகப் பற்றுடன் வாழ்வதற்கு உணர்வூட்டுங்கள். கல்வியைத் தாமாகக் கற்பதற்கு வழிவகுக்கவும். இதனால், மாணவர்களின் வாழ்வில் உயர்வு தானாக வந்துசேரும்.

# நாற்காலிகள்



பேசுவதற்காகப் பேசுகின்றோம்
பிடிக்காதுவிட்டாலும் கைதட்டுங்கள்
கைதட்டாமல்விட்டாலும் பேசுவோம்
கூச்சலிட்டாலும் பேசுவோம்
உங்களுக்குப் பிடிக்காவிட்டாலும் பேசுவோம்
இன்று ஒன்று பேசுவோம்
நாளை இன்னொன்று பேசுவோம்
சந்தர்ப்பம் வரும்போது சேர்ந்துவிடுவோம்
பின்பு பிரிந்துவிடுவோம்

நீங்கள் முட்கிரீடங்கள் சூட்டினீர்கள்
இரத்தம் சிந்தாமல்
வியர்வை சிந்தாமல்
அழகுபடுத்திக் கொண்டோம்
நீண்ட பொய்களின் முகங்கள்
எப்போது கலையும்?
எங்களுக்குத் தெரியாது
கலையும்போது
நாற்காலிகள் காலியாகிவிடும்

டானியல் சௌந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொதுக்கடன் மறுசீரமைப்பு: சிக்கலான செயன்முறையின் படிப்பினைகள்

பகுதி: VIII

**கலாநிதி. சுஜீதா ஜெகஜீவன்,**
பணிப்பாளர்,
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

இலங்கையின் மீட்சிக்கான பாதை: கடன் மற்றும் ஆளுகை எனும் தொனிப்பொருளில் கடந்த ஜூன் மாதத்தில் இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு மற்றும் சர்வதேச நாணயநிதியம் ஆகியன இணைந்து முக்கியமானதொரு மாநாட்டினை நடத்தியிருந்தன. இதில் பல முக்கியமான விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டிருந்தன. அந்த விடயங்களில் மிக முக்கியமானதாக பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டிய விடயங்களைத் தொகுத்து வழங்கும் நோக்கில் இந்தக் கட்டுரைத் தொகுதி தயாரிக்கப்பட்டது. இது 5 கட்டுரைகளைக் கொண்டிருந்ததுடன் இந்த இறுதிக் கட்டுரை இறுதி அமர்வில் பல முக்கியமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளியல் வல்லுநர்கள் பங்கேற்று இலங்கைப் பொருளாதார வளர்ச்சியினைக் கட்டியெழுப்புவதில் காணப்படும் சவால்கள் மற்றும் முக்கியமாக மேற்கொள்ளப்படவேண்டிய கொள்கை வழிமுறைகளைப் பற்றிக் மேற்கொண்ட கலந்துரையாடல்களை உள்ளடக்குகின்றது. இந்த நிகழ்வினை சர்வதேச நாணயநிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் முனைவர் கிரிஷ்ணா சிறீனிவாசன் தொகுத்து வழங்கினார்.

உலகளாவிய ரீதியில் தோற்றம்பெற்று வருகின்ற இடர்நேர்வுகள், சவால்களைப் பற்றிய கருத்துக்கள் ஆரம்பத்தில் பகிரப்பட்டன. இதுதொடர்பில் க கலாநிதி கீதா கோபிநாத், 2025 ஆம் ஆண்டானது உலகளாவிய ரீதியில் விதிகளை அடிப்படையாகக்கொண்ட சர்வதேச வர்த்தக முறைமையிலிருந்து விலகலடைந்து பாரியளவிலான பரிமாண மாற்றத்திற்குட்பட்டு வருவதாகத் தெரிவித்தார். அமெரிக்காவின் தீர்வை மாற்றங்கள் பற்றியும் அதன் தாக்கங்கள் பற்றியும் கலந்துரையாடிய அவர் உலகம் தற்காப்புப் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து வருவதாகவும் தீர்வை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தேசிய பாதுகாப்புப் பற்றிய கரிசனைகள் முன்னிலை வகிப்பதாகவும் தெரிவித்தார். இத்தகைய மாற்றங்களும் கரிசனைகளும் உலக வர்த்தகப் போக்கினையும் , இணைப்புகளையும் மாற்றியமைக்கக்கூடுமெனத் தெரிவித்தார். இதுவும் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் வலுவடைந்துவரும் புவிசார் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளும் உலகளாவிய ரீதியிலான அதிகரித்த நிச்சயமற்றதன்மைகளை உருவாக்கிய பொருளாதார வளர்ச்சிக்கான போக்குகள்மீது அனைத்து நாடுகளிலும் தாக்கத்தைச் செலுத்த முடியும்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க கடந்த இரு ஆண்டுகளிற்கு முன்னர் இலங்கை எதிர்நோக்கிய மிகச் சிக்கலான பொருளாதாரப் பிரச்சினைகளிற்கான காரணங்கள், அதிலிருந்தான மீட்சியடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் பற்றிக் குறிப்பிட்டதுடன் இதுவரை மீட்டெடுக்கப்பட்ட பொருளாதாரத்தைத் தக்கவைப்பதற்குச் செய்ய வேண்டிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினார். எதிர்பாராத உலகளாவிய சவால்களுக்கு முகங்கொடுப்பதற்குத் தேவையான பொருளாதாரத் தாங்கியிருப்புகளை போதியளவு கட்டியெழுப்பாமையினாலும் தொடர்ந்து பேணிக்கொள்ளாமையினாலும் இலங்கை கொவிட்19 காலத்திலும் பொருளாதார நெருக்கடிக் காலத்திலும் எதிர்நோக்கிய பிரச்சினைகள் இலங்கைக்கு ஒரு படிப்பினையாக அமைந்தது எனக் குறிப்பிட்டார். தற்போதைய நிச்சயமற்ற முக்கியமாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதில், பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதனால் வெளிநாட்டுத் துறையிலே குறிப்பாக சென்மதி நிலுவையில் வெளிநாட்டு நடைமுறைக்கணக்கு மிகையினைப் பேணுவதனூடாக உள்நாட்டுச் சேமிப்பு மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதும், அதிகளவில் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதும், இறைத்துறையிலும் வரவு- செலவுத்திட்ட ஆரம்ப மிகையினைப் பேணுவதும் அவசியமெனவும் அவர் கூறினார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி குமாரசுவாமி இலங்கையில் தற்போது 5 அம்சங்களை உள்ளடக்கிய முக்கியமான பொருளாதார நிலைமாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

1. பொதுநிதி முகாமைத்துவமும் இறை விதிகளும் சட்டவாக்கங்களின்மூலம் மேம்படுத்தப்பட்டமை
2. மத்திய வங்கிச் சட்டமும் அதன்மூலம் உறுதிப்படுத்தப்பட்ட மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மை, பொறுப்புக்கூறுந்தன்மை மற்றும் ஆளுகை
3. பொதுப்படுகடனின் அனைத்துப் பகுதிகளையும் ஒன்றாக முகாமைப்படுத்துவதற்கு வசதி செய்யும் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமும் மத்திய வங்கியிலிருந்து அந்தப்பொறுப்பு நீக்கப்படுகின்றமையும்
4. அரச நிதி மற்றும் வங்கித்தொழில் முறைமையிலும் காணப்பட்ட நிதியியல் சுமையினைக் குறைக்கச்செய்த எரிபொருள் மற்றும் வலு என்பவற்றிற்கான அடிப்படையாகக் கொண்ட விலையிடல் முறைமை
5. இலஞ்ச ஒழிப்பு மற்றும் ஆளுகை மேம்படுத்துவதற்கா[illegible] முன்னேற்றங்களும் கொள்கை முன்னெடுப்புகளும்

*(மிகுதி அடுத்தவாரம்)*



# உயிரைக் காக்கும் வீதி ஒழுங்கு

**களச்செயற்பாட்டுக்குழு 9,**
45ஆவது பிரிவு,
மருத்துவபீட மாணவர்கள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வழிகாட்டல்
**மருத்துவர் பா.சயந்தன்**

இன்றைய வேகமான உலகில் வீதி விபத்து ஒரு பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. தொழில்நுட்ப முன்னேற்றங்களாலும், வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், சாலைகள் நெரிசலாகி பல்வேறு விபத்துகள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் இலட்சக்கணக்கான மக்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். இலங்கைப் போக்குவரத்து பொலிஸ் துறையின் கருத்துப்படி வீதி விபத்துகளால் தினமும் 6 தொடக்கம் 7 உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இலங்கைச் சுகாதார அமைச்சின் தகவல்படி வருடாந்தம் அண்ணளவாக 14 ஆயிரம் மக்கள் வீதி விபத்துகளால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றனர். இதனைத்தடுப்பது ஒவ்வொரு தனிமனிதரதும் கடமையாகும். எனவே அனைவரும் இதில் தங்கள் பங்கை உணரவேண்டும்.

விபத்துகள் ஏற்பட முக்கியமான காரணம் வீதி விதிகளை முறையாகப் பின்பற்றாமையாகும். அத்துடன் வேகக்கட்டுப்பாடு இல்லாமல் ஓட்டுவது, தொலைபேசிகள் பயன்படுத்துவது, தலைக்கவசம் மற்றும் சீட்பெல்ட் அணியாதது, போதையில் வாகனங்களைச் செலுத்திச் செல்வது போன்றவற்றாலும் விபத்துகள் ஏற்படுகின்றன. அதைவிட, வாகன பராமரிப்பு இல்லாமை, ஓய்வு இல்லாமல் ஓட்டுதல், மழைக்காலங்களில் கவனக்குறைவு போன்றவை கூட பெரும் அபாயத்தை ஏற்படுத்துகின்றன. சாரதிகள் மட்டுமன்றி பாதசாரிகளின் கவனவீனமும் விபத்துகள் ஏற்படக் காரணமாகின்றன. இந்த விபத்துகளைத் தவிர்க்க பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம். முதன்மையாக, ஒவ்வொருவரும் போக்குவரத்து விதிகளை மதிக்கவேண்டும். தலைக்கவசம் மற்றும் இருக்கைப்பட்டி பயன்படுத்தும் பழக்கம் கட்டாயமாக இருக்கவேண்டும். வாகனங்கள் சரியான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். போதைப்பொருள்கள் உபயோகித்த நிலையில் வாகனம் செலுத்தக்கூடாது. ஒவ்வொரு வீதி ஒழுங்கும் ஒரு உயிரைக் காக்கும் அர்த்தம் கொண்டது என்பதை உணர வேண்டும். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் சமூக மையங்களில் சாலைப் பாதுகாப்பு குறித்த நிகழ்ச்சிகள், நாடகங்கள், பேச்சுப்போட்டிகள் நடத்தப்படவேண்டும். மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் பங்களிப்பு இங்கு மிக முக்கியமானதாகும். அதற்கு மேலாக, அரசு மற்றும் பொது அமைப்புகளும் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும். சாலைச் சீரமைப்புகள், சமிக்ஞை விளக்குகள், கண்காணிப்புக் கேமராக்கள் போன்றவையும், குற்றம் செய்பவர்களுக்கு உரிய அபராதங்களும் கட்டாயமாக்கப்படவேண்டும். மழைக்காலங்களில் சிறந்த பிடிமானம் உள்ள ரயர்களைக் பயன்படுத்துவது அறிவார்ந்த முடிவாகும்.

முக்கியமாக, ஒரு விபத்து நேர்ந்ததும் உடனடி முதலுதவி வழங்கும் அறிவும் மக்களுக்குத் தேவை. பாடசாலைகள் மற்றும சமூக மையங்களில் இதற்கான பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். இது பல உயிர்களைக் காப்பாற்றும்.

முடிவாகச் சொல்ல வேண்டுமானால், சாலைப் பாதுகாப்பு என்பதைத் தனிநபர் நடவடிக்கையால் மட்டுமல்ல, சமூக ஒற்றுமையாலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எமது ஒரு சிறிய கவனக் குறைவு மற்றொருவரின் உயிரை ஆபத்தில் ஆழ்த்தக்கூடும். ஒவ்வொருவரும் தங்கள் கடமையை உணர்ந்து செயற்பட்டால் மட்டுமே நம்முடைய சாலைகள் பாதுகாப்பானவையாக மாறும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்குலகின் அதிகார உதயம்



சௌந்தராஜன் துர்ஷாயினி
மூன்றாம் வருடம்,
ஊடகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வரலாற்றில் 19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் மேற்குலக நாடுகள், குறிப்பாக பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெய்ன் பின்னர் அமெரிக்கா ஆகியவை உலக அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் முன்னணியில் இருந்தன. ஆனால் 21ஆம் நூற்றாண்டுக்குள் வந்தபோது, இந்த நிலைமையில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உலகின் அதிகாரச் சமநிலையானது படிப்படியாக மேற்குலகத்தில் இருந்து கிழக்குலகத்துக்குச் செல்லும் நிலையைக் காணக்கூடியதாக உள்ளது. இதில் சீனா முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது.

கிழக்குலகின் அதிகாரத்தின் மையமாக இது திகழ்கிறது. சீனா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக மட்டும் அல்லாமல், உலகளாவிய வர்த்தக மற்றும் முதலீட்டுத் தளமாகவும் உருவெடுத்துள்ளது. பட்டுப்பாதை மூலம் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றை இணைக்கும் வணிகச் சாலையை உருவாக்கி வருகிறது. மேலும், தென்கிழக்காசியாவில் அதன் இராணுவப் பங்களிப்பும் உலக அதிகாரச்சமநிலையை மாற்றுகின்றது.

### எழுச்சியுறும் இந்தியா


சீனாவைப் பின்பற்றி இந்தியாவும் கிழக்குலகின் அதிகாரப் பலத்தைத் தன் கையிருப்பில் வைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. இதன்படி இந்தியா, சீனா எதிரி நாடுகளாக இருந்தாலும் வர்த்தக ரீதியாக இராஜதந்திர ரீதியாகவும் இரகசிய நண்பர்களாகவும் செயற்பட்டுவருகின்றன. இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக மட்டுமின்றி, அதிவேகமாக வளர்ந்துவரும் பொருளாதார மையமாகவும் திகழ்கிறது. தகவல் தொழில்நுட்ப சேவைகள், மருந்து உற்பத்தி, விண்வெளி ஆய்வு அதாவது சந்திரயான், ஆதித்யஎல்1 திட்டம் போன்ற துறைகளில் இந்தியா உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. மேலும், இந்தியாவின் இளம் தொழிலாளர் வலிமை, வர்த்தகச் சந்தை, மற்றும் சர்வதேசக் கூட்டாண்மைகள் (அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், ஆபிரிக்கா) ஆகியவை அதனை உலக அரசியலில் முக்கியமான அங்கமாக்குகின்றன. இந்த இரு நாடுகளையும் இணைக்கும் பாலமாக திகழ்வது ரஷ்யா எனும் முந்தைய வல்லரசாகும். 1991ஆம் ஆண்டு ரஷ்யா சோவியத் ஒன்றியத்திலிருந்து வெளியேறித் தனது பலத்தைக் குறைத்துக்கொண்டாலும், இன்றும் துடிப்புடன் செயற்பட்டுவரும் ஒரு நாடாகவே இருக்கின்றது. அதன் ஒரே குறிக்கோள் மேற்குலகின் அதிகாரச் சமநிலையை உடைப்பதே ஆகும். ரஷ்யா உலகின் முக்கியமான எரிசக்தி உற்பத்தி நாடாகும். இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் மூலமாக ஐரோப்பிய நாடுகளின்மீது மிகுந்த தாக்கத்தை செலுத்துகிறது. இராணுவ வலிமை, அணு ஆயுதங்கள், மற்றும் உக்ரைன் போர் போன்ற அரசியல் நடவடிக்கைகள் மூலம் ரஷ்யா உலகச் சமநிலையில் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது.

> உலகம் இனி ஒருதுருவ அமைப்பில் இல்லாமல், பல்துருவ அமைப்பாக மாறியுள்ளது. மேற்குலக நாடுகளின் ஆதிக்கம் குறைந்து, கிழக்குலக நாடுகள் உலக வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் தீர்மானிக்கக்கூடிய பங்காற்றுகின்றன.

### பிரிக்ஸ் எனும் பிரமாண்டம்

மேற்குறிப்பிட்ட நாடுகளைத்தவிர பல நாடுகள் ஒன்று சேர்ந்து கூட்டமைப்பாகவும் செயற்படுகின்றன. இதன் மூலம் மேற்குலகின் அதிகாரச்சமநிலையைப் பெற்று அது கிழக்குலகின் பக்கம் ஈர்க்கப்பட்டு வருவதனைக் காணமுடியும். அத்தகைய கூட்டமைப்புகளாக பிரிக்ஸ் மற்றும் ஆசியான் போற்ற கூட்டமைப்புகளைக் குறிப்பிடலாம். பிரிக்ஸ் உலகின் பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களை பிரதிபலிக்கும் அமைப்பாக உள்ளது. இவர்கள் மேற்குலக ஆதிக்கத்துக்கு மாற்றாக ஒரு புதிய தளத்தை உருவாக்குகின்றனர். ஆசியான் தென்கிழக்காசியாவின் பொருளாதார மற்றும் அரசியல் சக்திகளை ஒருங்கிணைத்து, சீனா மற்றும் இந்தியாவுடன் வலுவான உறவை வளர்க்கிறது. சங்காய் ஒத்துழைப்புக் கூட்டமைப்பு பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான கிழக்கு நாடுகளின் வலிமையை வெளிப்படுத்துகிறது. இந்த மாற்றங்களின் விளைவாக, உலகம் இனி ஒருதுருவ அமைப்பில் இல்லாமல், பல்துருவ அமைப்பாக மாறியுள்ளது. மேற்குலக நாடுகளின் ஆதிக்கம் குறைந்து, கிழக்குலக நாடுகள் உலக வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் தீர்மானிக்கக்கூடிய பங்காற்றுகின்றன. இதன்மூலம் சர்வதேச அரசியலில் புதிய சமநிலை உருவாகிக்கொண்டுவருகின்றது.

# தென்மராட்சியில் பேசப்படும் பெண்கள்சார் பழமொழிகள்



கில்டா தேவராசா

பழமொழிகள் என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கைமுறையினையும், அனுபவங்களினையும், மற்றும் வரலாற்றுப் பாரம்பரியங்களினையும் பிரதிபலிக்கும் மொழிக் களஞ்சியமாகும். தொன்றுதொட்டுப் பேசப்படும் இந்தப் பழமொழிகளில் கணிசமானவை, பெண்கள் சார்பானவையாக அமைந்திருப்பது அவதானிப்பு.

குறிப்பாகத் தமிழில் பெண்களைப் பற்றிய பழமொழிகள் பல்வேறு பார்வைகளிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில பெண்களின் ஆற்றலைப் பாராட்டுகின்றன, சில பெண்களின் நிலையைக் குறைத்துக் காட்டுகின்றன, சில சிந்திக்க வைக்கும் அளவுக்கு நகைச்சுவைத்தன்மை மிக்கவையாகவும் உள்ளன. அந்தவகையில் தென்மராட்சியில் பேசப்படும் பழமொழிகள் தொடர்பான ஆய்வாக இது அமைகின்றது.

பழமொழி என்பது மொழியை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல, அது அக்கால சமுதாய வாழ்க்கையையும் அவர்கள் வாழ்ந்த நிலையை அவர்களுடைய பழக்கவழக்கம், பண்பாடு, கலாசாரம் போன்றவற்றினூடாக எடுத்துக்காட்டி நிற்கின்றது.

'மாமியார் உடைச்சா மண் குடம், மருமகள் உடைச்சா பொன் குடம்' இந்தப் பழமொழியின் கருத்து மாமியார் ஒரு குடத்தை உடைத்தார் ஆயின் அது பரவாயில்லை என்று விட்டுவிடப்படுகின்றது. அதுவே மருமகள் அதே குடத்தை உடைத்தால் அது பெரிய விஷயமாகப் பேசப்படுகின்றது. இது மாமியார் மருமகளுக்குரிய ஒற்றுமையின்மையை காட்டுகின்றது.

'பெண் புத்தி பின் புத்தி' என்ற பழமொழியும் தென்மராட்சியில் அதிகம் பேசப்படுகின்றது. இது, பெண்ணானவள் பின்விளைவுகளை யோசித்து முடிவெடுப்பவள் எனவே பெண்புத்தி பின் புத்தி எனப்பட்டது. இந்தப் பழமொழியில் பெண்ணின் மேன்மை குறிப்பிடப்பட்டுள்ளது.

'வேண்டாப் பொண்டாட்டி கைபட்டாலும் குற்றம் கால் பட்டாலும் குற்றம்'

இந்தப் பழமொழியின் கருத்து தேவையில்லாத ஒரு மனைவி என்ன செய்தாலும் குற்றமாகவே காட்டப்படும். இது ஒரு பெண்ணடிமைத் தனத்தை வெளிப்படுத்தும் பழமொழியாகும்.

'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற பழமொழியின் உண்மைக் கருத்து, கற்கவில்லையானாலும் கணவன் வயதில் குறைந்தவன் ஆனாலும் புருஷன் என்பதே. 'ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரிய விரட்டினாளாம்' ஒரு பெண்ணாலேயே பெண்ணுக்குப் பொல்லாதவள் எனப் பெயர் சூட்டப்படுகின்றது. பெண்ணை குறைவாகச் சித்திரிப்பது வீட்டுக்கு மருமகளாக வந்த பெண் அங்குள்ள மாமியார் மற்றும் மைத்துனியை விரட்டி அடிப்பது இதனூடாகச் சொல்லப்படுகின்றது இந்தப் பழமொழியிலும் பெண் பொல்லாதவளாக சித்திரிக்கப்படுகின்றாள்.

> 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற பழமொழியின் உண்மைக் கருத்து, கற்கவில்லையானாலும் கணவன் வயதில் குறைந்தவன் ஆனாலும் புருஷன் என்பதே.

தொழில் நுட்பமயமாக்கப்பட்ட தற்காலச் சூழலில் இவ்வாறான பழமொழிகள் பேசப்படுவதில்லை என்பதும் அவை பேசப்பட்டாலும் தவறான அர்த்தங்களையே முன்வைக்கின்றன. என்பதும் கவலைக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீலன்: மௌனிக்கப்படாத குரல்



கலாநிதி நீலன் திருச்செல்வம் ஒரு புகழ்பெற்ற இலங்கைத் தமிழ்க் கல்வியாளர், அரசியலமைப்புச் சட்ட நிபுணர் மற்றும் அரசியல்வாதி. அவருடைய கனவுகள், கருத்துகள் மற்றும் கொள்கைகளை உயிர்ப்பிக்கும் கல்விசார் ஆவணப்படம்தான் 'நீலன்: மௌனிக்கப்படாத குரல்'.

திரைப்பட இயக்குநர் பிரசன்னா சண்முகதாஸ் இயக்கத்தில் உருவான இந்த ஆவணப்படம், ஒரு தனிநபரின் வாழ்க்கை வரலாற்றையும், ஒரு தேசத்தின் வரலாற்றுப் பதிவையும் இணைக்கிறது. நீலன் திருச்செல்வத்தின் ஆவணக்காட்சிகள் மற்றும் அவரை அறிந்தவர்களின் நினைவுகள் வழியாக, மீண்டும் அவர் பேசுவது போன்ற உணர்வை இந்த ஆவணப்படம் ஏற்படுத்துகிறது. முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அரசியலமைப்பு நிபுணர் ரொஹான் எதிரிசிங்க போன்ற இலங்கை அரசியல் அறிஞர்கள், மறைந்த இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், வீரசிங்கம் ஆனந்தசங்கரி போன்ற தமிழ் அரசியற் தலைவர்கள், மற்றும் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் போன்ற சர்வதேசப் பிரதிநிதிகளின் முக்கியமான நேர்காணல்கள் இந்த ஆவணப்படத்தில் இடம்பெற்றுள்ளன.


இந்த ஆவணப்படத்தின் முக்கியமான அம்சம், 1995ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதியன்று நீலன் திருச்செல்வம் முன்வைத்த 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்ற அரசியலமைப்பு சீர்திருத்த முன்மொழிவுகளை மையப்படுத்துவதுதான். நாட்டின் இன மோதல்களுக்கு ஜனநாயக வழியில் தீர்வுகாணும் வகையில், தேசிய ஒற்றுமையைப் பேணியபடி, இலங்கையின் பிராந்தியங்களுக்கு முழுமையான சுயாட்சியை வழங்கக்கூடிய அதிகாரப் பரவலாக்கத்தை இந்த முன்மொழிவுகள் வலியுறுத்தின. இது இலங்கையின் வரலாற்றில் ஒரு புரட்சிகரமான முயற்சி. இந்த முன்மொழிவுகள் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கும், அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து பிராந்தியங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கும் வழி வகுக்கக் கூடியன. மேலும், அந்த அதிகாரங்களை மத்திய அரசு தன்னிச்சையாகப் பறிப்பதைத் தடுக்க அரசியலமைப்புப் பாதுகாப்புகளையும், சிறுபான்மைச் சமூகங்களுக்கு வலுவான உரிமைகளையும் வழங்க அவை கோரின. கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்கள் ஆகியும், இத்தகைய பாதுகாப்பு அம்சங்கள் இன்னும் இலங்கையின் அரசியலமைப்பில் முழுமையாக இடம்பெறவில்லை.

இந்த ஆவணப்படம் தற்போது வெளியாகியிருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கம், நாடாளுமன்றத்தில் அரிதான அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. இது நீலன் திருச்செல்வத்தின் கனவுகளை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசியல் வாய்ப்பை உருவாக்கியுள்ளது. திஸாநாயக்க தனது தேர்தல் பரப்புரையின்போது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதாகவும், அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை உருவாக்குவதாகவும் உறுதியளித்தார். இது நீலன் திருச்செல்வத்தின் அரசியலமைப்பு தொலைநோக்குப் பார்வையை நினைவுபடுத்துகிறது. ஆனாலும், ஆட்சிக்கு வந்த பிறகு அரசியலமைப்புச் சீர்திருத்தம் குறித்த ஆர்வம் குறைந்திருப்பதைக் காணமுடிகிறது. இந்த ஆவணப்படம், ஒரு விரிவான அரசியலமைப்பு சீர்திருத்தம் எப்படி அமைய வேண்டும் என்பதற்கான ஒரு வழிகாட்டியாகவும், அதேநேரத்தில், குடிமக்கள் தங்கள் தலைவர்கள் அளித்த வாக்குறுதிகளுக்குப் பொறுப்பேற்கவேண்டும் என்பதற்கான அழைப்பாகவும் அமைகிறது.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்ற ஒரு அறிஞராக, உலகின் எந்த நாட்டிலும் ஒரு வெற்றிகரமான வாழ்க்கையை அவர் அமைத்துக்கொண்டிருக்கமுடியும். ஆனால், அவர் போரால் பாதிக்கப்பட்டு இலங்கைக்குத் திரும்பிய, அனைத்துச் சமூகங்களும் சம உரிமைகளுடன் இணைந்து வாழக்கூடிய ஒரு அரசியலமைப்புக் கட்டமைப்பை உருவாக்க அவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். ஆயுதப்போராட்டம் அல்லது பிரிவினை என்பதற்கு மாறாக ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தீர்வுகளைக் காண்பதற்கான அவரது முயற்சிதான் இறுதியில் அவரது உயிரைப் பறித்தது.

இலங்கை மீண்டும் ஒரு வரலாற்றுத் திருப்புமுனையில் நிற்கும் இந்தத் தருணத்தில், கலாநிதி திருச்செல்வத்தின் குரல், அனைவரையும் உள்ளடக்கிய ஜனநாயக சமூகத்தைக் கட்டியெழுப்பத் தேவையான உத்வேகத்தையும், தெளிவான வழிகாட்டுதலையும் எமக்கு வழங்குகிறது.

# முன்னால் முன்னாள்!



முன்னாள் இருந்ததாலேயே
இந்நாள் இனிக்கிறது.......!
முன்னால் இருக்கும்
நினைவோடுதானே இந்நாள்
நகர்கிறது..........!!

முன்னாளா, இந்நாளா?
எந்நாள் நன்நாள் என
விடைதேட முயன்றால்
எதிர்காலம் இருளாகும்
காலம் கடந்து போகட்டும்
புதிய நாள் மலரட்டும்....!

காலங்களின் சங்கமம்
கஷ்டகாலம் என்பதே மெய்
முன்னாள் நினைவுகளுடன்
இந்நாளை நிஜமாக வாழ்வதே
வருங்காலத்துக்கான வரம்...!

கடவுச்சொல்லாக, புனைபெயராக
ஒளிந்து பயணிக்கிறது 'முன்னாள்'
என்னுள் ஓர் அங்கமாகவே
துணிந்து வருகிறது 'இந்நாள்'
கனவோடு வாழட்டும் 'முன்னாள்'
கண்ணாக இருக்கட்டும் 'இந்நாள்'

ஆர்.சனத்

# என் குலசாமி



சாமி கோயிலோ ஊரில ஏராளம்
சாமியை விஞ்சிட என் தாய்
மனசோ தாராளம்
தன்னைச் சுமையாக்கி

என்னை நெஞ்சில் சுமக்கிறாள்
தன்மடி தந்து தூங்கவைத்து
என்பசி போக்குவாள்
தன்னை தலையணை ஆக்கி

என்னைத் தூங்க வைப்பாள்
நான் கலங்கினால்
கண்ணீராவாள்
காயம் பட்டால் வலியாவாள்

கிடைத்ததை வைத்து
அடுப்பாக்கி ஆக்கிப் போடுவாள்
அடுத்தவர் போல்

என்னை ஆற்றுப்படுத்துவாள்
பட்ட மரத்திலும்
பால் சுரக்கும் அவள்
தொட்ட மண்ணும்

பொன்னாய் விளையும்
என் ஊரும்
என் தாயும் உள்ளவரை
நான் அகதியில்லை

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் விருட்சமாக யாழ்.பல்கலைக்கழகம்

## வடக்கு ஆளுநர் பெருமிதம்



யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது இறக்கைகளை விரித்து, கிளிநொச்சியில் புதிய பீடங்களை நிறுவி இன்று 'அனைவருக்கும் கல்வி' என்ற கனவு உறுதிபட பெரும் சமூக மாற்றங்களுக்கான வழியை உருவாக்கியுள்ளது என்று என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இதன்போது சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரால் பல பாதிப்புகளை எதிர்கொண்டபோதும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு நிகராக தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக 1974ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட உயர்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக இன்று வியாபித்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கட்டடங்களும், வகுப்பறைகளும் கொண்ட கல்வி நிலையம் மட்டுமல்ல. வடக்கு மாகாணத்தின் செழுமையான கல்விமரபை பிரதிபலிக்கும் உயிரோட்டமான சின்னமாகவும், பிராந்திய வளர்ச்சிக்கான இயக்க சக்தியாகவும் விளங்குகின்றது. அவற்றின் கல்வி வளங்கள் பல்கலைக்கழகத்தின் சுவரைத்தாண்டி பரவச் செய்ய வேண்டும் -என்றார். (ச-க-113)

# மண்டைதீவு மனிதப்புதைகுழிக்கு தூயநீதி கிடைக்க வாய்ப்பில்லை

## அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக்.8**

**மண்டைதீவில் உள்ள கிணறு ஒன்றில் மனித எலும்புக்கூடுகள் உள்ளன என்று கூறப்படும் நிலையில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் மூலம் தூய நீதி கிடைக்காது என்று அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கானல்நீதி நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மண்டைதீவுப் புதைகுழி என நம்பப்படும் கிணற்றின் மீது நினைவுச் சின்னம் ஒன்று வைக்கப்பட்டது அது பின்னர் உடைக்கப்பட்டது. ஏன் கிணற்றை அகழ்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. இதுதொடர்பில் தற்போது வழக்குப் போடப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்குப் பதிலடி கொடுப்பதே போராட்ட வடிவமாக இருந்தது. தமது மக்களை இன அழிப்புச் செய்தவர்களைத் தண்டித்தனர். தண்டிக்கும் சக்தி அவர்களிடம் இருந்துபோது மண்டைதீவு கிணற்றுப் புதைகுழியுடன் சம்பந்தப்பட்டவருக்கு அராலியில் வைத்துத் தண்டனை வழங்கினார்கள். அன்றைய காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கொடூரங்களுக்கு இலங்கைக்குள்ளோ அல்லது சர்வதேச நீதி விசாரணைகளோ தேவைப்படவில்லை. அவர்களே அதை நிறைவேற்றினார்கள். தற்போது தமிழ் மக்கள் தமக்கு அநீதி இழைக்கப்படும்போது தனியாக அல்லது சிறு குழுவாக போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஒடுக்கப்பட்டதமிழ்இனம்தமக்கான நீதியைப் பெற்றுக்கொள்ளும் இடமாக இலங்கை அரசாங்கத்தை நம்பமுடியாது. அவ்வாறு வழங்கப்படும் நீதியும் தூயநீதி யாக இருக்காது-என்றார். (எ-20)


# யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகப் பாலித்த

யாழ்ப்பாணம்,ஒக்.8

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித்த செனவிரத்ன யாழ்ப்பாண பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய எம்.கோணேஸ்வரன் எதிர்வரும் 10ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். (ச-28)


## மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 22 . 09 . 1947 |  | 05 . 10 . 2025 |

**கலாபூசணம் சரவணை குமாரசாமி (நாகலிங்கம் மனேச்சர்)**

**(ஓய்வுநிலை கிளை முகாமையாளர், சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம்)**

ஏழாலையை பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கலாபூசணம் சரவணை குமாரசாமி (ஓய்வுநிலை கிளை முகாமையாளர் சுன்னாகம் பல.நோ.கூ. சங்கம்) அவர்கள் கடந்த 05.10.2025 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் அமரர்களான சரவணை சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், அமரர்களான கந்தையா - யோகமலர் தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், அமரர் கமலினி மற்றும் லீனதயாளன் (கிராம உத்தியோகத்தர், உடுவில் பிரதேச செயலகம்), தமிழினி (முன்னாள் யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர், லண்டன் உயிரியல் மருத்துவ விஞ்ஞானி M.L.T. (Formar) யாழ்.போதனா வைத்தியசாலை, களுபோவல வைத்தியசாலை, கொழும்பு), தயாளினி (முன்னாள் விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம், மனித உரிமை ஆணைக்குழு நிர்வாக கற்கை ஒழுங்கிணைப்பாளர், கொழும்பு சட்ட பீடம், தற்போதைய இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர், மொழிக் கற்கைகள் துறை, தயாளரூபினி (பல்கலைக்கழக மாணவி மருத்துவ பீடம்), தயாளநீதனி (பல்கலைக்கழக மாணவி, பொறியியல் தகவல் தொடர்பாடல் பீடம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சேந்தனா (இரசாயனவியல் ஆசிரியர், மன்னார் முருங்கன் மத்திய கல்லூரி, தற்பொழுது புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கேஷகி, மித்ரசகி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன் (சமாதான நீதவான், அதிபர்), சொக்கலிங்கம் (புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்), பத்மநாதன் (உத்தியோகத்தர், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், முருகையா (ஓய்வு பெற்ற சமூக சேவை உத்தியோகத்தர், நெடுந்தீவு - உடுவில் பிரதேச செயலகம்), யோகரத்தினம் செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2025) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது ஊரெழுவிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


**தொடர்புகளுக்கு**
**லீனதயாளன் - 077 220 3097**
**தயாளினி - 077 980 4158**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**ஊரெழு.**



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 19 . 02 . 1945 |  | 05 . 10 . 2025 |

**முத்தையா குணரெத்தினம்**

**(வைரமாளிகை குணம், கிளிபத்தர்)**

நல்லூரை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்தையா குணரெத்தினம் அவர்கள் கடந்த 05.10.2025 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா மற்றும் இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், தம்பாப்பிள்ளை மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கிருஷ்ணசாமி, சத்தியபாமா, நாகராசா, நல்லையா, புஸ்பராணி மற்றும் ருக்குமணி, சோமலிங்கம், இந்திராதேவி, பாலராஜா, புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்ஷினி (லண்டன்), மகிந்தன் (சுவிடன்), கல்பனா (கனடா), ஜெகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயராஜா, ரவீந்திரன், சங்கீதா, மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ராகவி, கோசலன், ஜெசிகன், கெவன், அமலியா, சியாந், கிசாந், டிலக்ஷன், நிதுஷன், விதுஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2025) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.11/3, விவசாய கந்தோர் ஒழுங்கை,**
**முத்திரைச் சந்தி, நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 628 2830**
**075 522 7046**

(CR 45614) A


# பேனா வடிவிலான துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு,ஒக்.8

பேனா வடிவில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட தன்னியக்கத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நாகொட பொலிஸ் நிலைய அதிகாரி களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபர் மாபலகமப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என்றும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர் (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குள் வசிப்பவராகவும் இலங்கைப் பிரஜையாகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பத்தினையும் மற்றும் தகமைகள் சேவை நிபந்தனைகள் தொடர்பான விபரத்தினையும் 15.10.2025 திகதி பி.ப 2.00மணி வரை இந்நகராட்சிமன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


- இப்பதவி முற்றிலும் தற்காலிகமானது.
- இப்பதவிக்கு குறித்துரைக்கப்பட்ட வேதனமோ அல்லது படிகளோ வழங்கப்படமாட்டாது.
- அறவிடப்படும் ஆதனவரி வருமான நிலுவைத் தொகையின் 20% தரகுப்பணம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை 22.10.2025 அன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தவிசாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

(CR/46441) J-1

# கண்ணீர்க் காணிக்கை



எமது நண்பர்கள்
**ஏங்கல் பெர்ட் (Engelberd), ஜஸ்டின் (Justin)**
ஆகியோரின் அன்புத் தந்தை

## அமிடேயுஸ் கோல்பேட்
## (Amidejus Goal bert)


**(ஊர்காவற்றுறை)**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**கனடா நண்பர்கள்**

(CS/59598) J-1

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24.01.1978 | 06.10.2025 |

## கந்தசாமி தர்சனன்

**(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலி மேற்கு, சங்கானை)**

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டு தென்மேற்கு வட்டுக் கோட்டையை (சங்கரத்தை) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தர்சனன் நேற்று முன்தினம் (06.10.2025) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - அரியமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகரணியின் (ஆசிரியர், யா/வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாலயம்) பாசமிகு கணவரும், மேருக்சன், பிரவீன் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செந்தூரன் (பொறியியலாளர்), சுகந்தியா (ஜேர்மனி), தர்சினி (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செங்கமலச்செல்வி (சுற்றாடல் உத்தியோகத்தர்) காலஞ்சென்ற ரவிச்சந்திரன் (ஜேர்மனி), புவிராஜ், சிவாஜினி (சுவிஸ்), சிவயோகினி (சுவிஸ்), சிவந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜதுயன், நித்திலா, சுஜீபனா, வினோஜன், பர்ணிதா, சன்விகா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், டிலோஜன், டினுஜா, மதுசா, கவீனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2025) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை (சங்கரத்தை) இல் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 90 86 483**
**074 01 36 722**

தகவல்:
குடும்பத்தினர்

(CR 46...A)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.09.1935 | 05.10.2025 |

## செல்வப்பாக்கியம் திருஞானசம்பந்தமூர்த்தி

**(முன்னாள் ஆவரங்கால் மாதர்சங்கத் தலைவி)**

யாழ். ஆவரங்கால் சிவன்வீதியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், கொழும்பு, லண்டன், ஈஸ்ட்ஹாம்ல் வசித்தவருமான செல்வப்பாக்கியம் திருஞானசம்பந்தமூர்த்தி (முன்னாள் ஆவரங்கால் மாதர்சங்கத் தலைவி) அவர்கள் கடந்த (05.10.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி (மூர்த்தி - இலங்கை பொலிஸ் திணைக்கள தலைமைக்காரியாலய பிரதம லிகிதர்) இன் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிர்காமு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஞானசெல்வவனிதா (வனிதா - UK), செல்வமூர்த்தி (பபி - UK), பாக்கீஸ்வரமூர்த்தி (ஈசன் - UK), திருச்செல்வஉமா (உமா - UK) - (Essey Tamil Academy - Founder and Head Teacher/ Secondary School Teacher - London), ஞானகலாசெல்வி (பாப்பா - France), செல்வேந்திரமூர்த்தி (இந்திரன் - UK), கோசலாதேவி (கோசலை - UK), சகலகலாதேவி (சகலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகுமாரன் (UK), சர்மிலா (UK), லலிதாம்பிகை (யசோ - UK), ஜெயக்குமார் (UK), நவரட்ணராஜா (France), பிரியதர்சினி (UK), மணிவண்ணன் (UK), ஈஸ்வரன் ஆகியோரின் மாமியாரும், அசிதன், சாளினி, அர்சுதன், துஷா, ஆகீசன், நாராயணன், வெங்கடேசன், ஜெயராம், Dr.அருணன், Dr.அஜந்தன், தரணிதரன், ஜதுஸ்வர்ணா (தாரணி), ஆரணி, மாதங்கி, வர்சினி, அர்ச்சனா, அபிராமி (மருத்துவபீட மாணவி), சிவராம், Dr.ஐங்கரன் (Jaffna Teachinhing Hospital), செந்தூரன் (Faculty of Siddha medicine and Surgery University of Jaffna), Dr.பிரதீபா - அசிதன் ஆகியோரின் பேத்தியும், காலஞ்சென்ற தமிழரசு - சின்னத்துரை, கதிர் - பாலசுந்தரம் (ஓய்வுநிலை அதிபர் - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை), தர்மலிங்கம், இராசலிங்கம் மற்றும் மகேஸ்வரி (பரமேசு - கொழும்பு), பூமணி ஆகியோரின்சகோதரியும், காலஞ்சென்ற இராசலட்சுமி, சிவபாதசுந்தரமூர்த்தி (ஓய்வுநிலை பொலீஸ்), கனகாம்பிகை, குருமூர்த்தி (Eng - CTB), நகுலாம்பிகை, நல்லபிள்ளை, மகேஸ்வரி மற்றும் செல்வபாக்கியம், காலஞ்சென்ற சின்னத்துரை (சிவலிங்கம்), சின்னராசு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.10.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் (ஆவரங்கால்) வைக்கப்பட்டு நாளை (09.10.2025) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**0044 7467 036259 - வனிதா**
**0044 7436 549057 - பபி**
**0044 7786 910802 - ஈசன்**
**0044 7944 965408 - இந்திரன்**
**074 099 2204, 077 257 1772 - சகலை**

(CS/59595) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## 31 ஆம் ஆண்டு நினைவுநாள் | 1 ஆம் ஆண்டு நினைவுநாள்





| அமரர் கந்தையா சிவஞானம் | | அமரர் மாங்கையற்கரசி சிவஞானம் | |
|---|---|---|---|
| மலர்வு | உதிர்வு | மலர்வு | உதிர்வு |
| 20.02.1921 | 20.09.1994 | 13.02.1931 | 19.09.2024 |
| திதி: அபரபக்க புரட்டாதி பிரதமை 07.10.2025 | | திதி: அபரபக்க புரட்டாதி துதியை 08.10.2025 | |

பாசமுடன் பெற்றெடுத்து சீராட்டி, தாலாட்டி
வளர்த்தெடுத்து பாரினிலே புகழ் ஓங்க வைத்தோரே
உங்கள் கடமைகள் முடிந்ததென்று மண்ணுலகம் நீங்கி
விண்ணுலகம் சென்றீரோ
என்றும் உங்கள் நினைவுகளுடன்

**மகன்மார், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்**

சிவஞானம் - சிவராம்.
கற்பகப்பிள்ளையார் வீதி, உரும்பிராய் வடக்கு.

(CR/46386) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகளை மூச்சிழக்கவிடாது சந்ததிக்கு எடுத்துச் செல்வோம்

## பொ. ஐங்கரநேசன் ஆதங்கம்

முல்லைத்தீவு, ஒக். 8

போராட்டக்காலத்தில் மக்களை எழுச்சிகொள்ள வைத்த கலை, இலக்கியங்கள் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனித்ததோடு மூச்சிழந்து விட்டன என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

பொ. ஐங்கரநேசனின் 'வேர்முகங்கள்' நூலின் அறிமுகவிழாவில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ஆயுதப்போராட்டம்முடிவுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளதே தவிர, தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் முடிவுக்கு வரவில்லை. ஆயுதப் போராட்டத்தின் முடிவுடன் தமது பேனாக்களை மூடி வைத்துள்ள கலை, இலக்கியவாதிகள் தமது பணிகளைத் தொய்வின்றித் தொடரவேண்டும்.



போருக்குப்பின்னரான எமது இளைய தலைமுறையைத் தமிழ்த்தேசிய உணர்வில் இருந்தும் மடைமாற்றி, பெருந்தேசிய வாதத்துக்குள் கரைக்கும் நிகழ்ச்சிநிரலை தெரிந்தோ தெரியாமலோ பலர் முன்னெடுத்து வருகின்றனர். எமது போராட்டத்தின் நியாயங்களை, போரில் பெற்ற வெற்றிகளை, பட்ட வதைகளை எமது இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லுவது வரலாற்றுக் கடமையாகும் - என்றார். (ச-25, 27)

### பொலிஸாருக்குப்...

ஸார் முயன்றுள்ளனர். இதற்காக அவருடைய வீட்டுக்குச் சென்றபோது, பொலிஸார் வருவதை அறிந்த அந்தச் சந்தேகநபர், அங்கிருந்து தப்பியோடியுள்ளார். இதன்போதே, அவர் ரயிலுடன் மோதுண்டுள்ளார்.

படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### நாணய...

தயார் நிலையில் உள்ளன என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆறாவது தவணையை வழங்குவதற்கு முன்னதாக நடத்தப்படும் இடைக்காலக் கலந்துரையாடலாக இது அமைந்தது.

இதன்போதே, நாணய நிதியம் வழங்கியுள்ள பொருளாதார இலக்குக்கும் அப்பால் பயணிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஜனாதிபதி அநுர வெளிப்படுத்தியுள்ளார். 'பொருளாதார மறுமலர்ச்சி இலக்கை அடைவதற்கு, அதிகளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பது அவசியம். அதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன' என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஜனாதிபதி அநுரவின் கருத்தை, நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் வெகுவாக வரவேற்றனர். அத்துடன், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அண்மைக்காலமாக எடுத்துவரும் நடவடிக்கைகளையும் நாணய நிதியப் பிரதானிகள் பாராட்டியுள்ளனர்.

தொழில் அமைச்சரும், பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்ணாண்டோ, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஆர். அபொன்சு, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த ஹலங்கமுவ, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்டோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (அ-ம-இ)

### வல்லிபுர...

கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமானது. தொடர்ந்து 17 நாள்கள் திருவிழா நடைபெற்றது. வருடாந்த மகோற்சவத்தின் இறுதி நாளான நேற்று செவ்வாய்க்கிழமை கேணித் தீர்த்தத் திருவிழா இடம்பெற்று மாலை கொடி இறக்கம் நடைபெற்றது. (அ-ம-100)

### ஹெரோய்ன்...

செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் போதைப்பொருள்களைக் கடத்த முயன்ற இருவர், இருவேறு சந்தர்ப்பங்களில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் பெண். குறித்த பெண் சிறையில் உள்ள தனது கணவனுக்காக உணவுப் பொதிக்குள் ஹெரோய்னை மறைத்து வைத்துக் கடத்த முயன்ற போது கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 5 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறைச்சாலையில் உள்ள தனது நண்பனைப் பார்க்கச் சென்றபோது, ஹெரோய்ன் மற்றும் கஞ்சாவை சூட்சுமமான முறையில் மறைத்துக் கொண்டு சென்ற புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த ஆணொரொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 5 மில்லிகிராம் ஹெரோய்ன் மற்றும் சிறியளவு கஞ்சா என்பன மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் இருவருக்கும் எதிரான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (அ-ம-20)

### சுங்க...

வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2025ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சுங்கத் திணைக்களத்தின் வருவாய் 253.15 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது. 2024ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சுங்கத் திணைக்களத்தின் வருவாய் 144.97 பில்லியன் ரூபாவாக பதிவான நிலையில், அண்ணளவாக 74.6 வீதம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

### பொலிஸாரின்...

களை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விடயத்தில், நேற்றுமுன்தினம் பெண் சட்டத்தரணி ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவரின் வீட்டில் நீதிமன்ற அனுமதி இல்லாமல் தேடுதல் நடத்தியதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு நீதிமன்ற அனுமதி இல்லாமல் பொலிஸார் தேடுதல் நடத்தியதைக் கண்டித்தே வடக்கு, கிழக்கு ரீதியில் சட்டத்தரணிகள் நேற்றுப் போராட்டம் நடத்தியுள்ளனர். (அ-ம-26-28-20-110-18-56-9)

### மோ.சைக்கிள்...

காயமடைந்த குடும்பத்தலைவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார். கந்தசாமி தர்சன் (வயது-48) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த முதலாம் திகதி வட்டுக்கோட்டை சித்தன்கேணி வீதியில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது படுகாயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார். மேலதிக சிகிச்சையின்போதே நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### பிரபல...

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் விடுதிகளில் பெண்களுடன் உல்லாசமாக இருக்க முடியும் எனவும், அதற்காக 10 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வரையில் செலவாகும் எனவும் சமூக வலைத்தளங்களான வட்ஸ்அப், வைபர், பேஸ்புக் ஊடாக அந்தக் குழு விளம்பரம் செய்துள்ளது. இதற்காக, சில பெண்களின் ஒளிப்படங்களை அவர்களின் முகங்கள் மறைக்கப்பட்ட நிலையில் அந்தக் குழு பயன்படுத்துகின்றது.

இந்த விளம்பரத்தை நம்பி, அதிலுள்ள இலக்கத்துக்கு சிலர் தொடர்புகொள்ளும் போது குறித்த தனியார் விடுதிகளில் அந்தப் பெண்கள் உள்ளனர் என்று தெரிவித்து மோசடியாளர்கள் பணத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். பணத்தினை வழங்கியவர்கள் அந்த விடுதிகளில் சென்ற பின்னரே தாம் ஏமாற்றப்பட்ட விடயத்தை அறிந்து கொள்கின்றனர். இதுதொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யத் தயங்குவதால், குறித்த குற்றக் குழுவினர் தொடர்ச்சியாக பண மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் விடுதிகளின் பெயர்களைப் பாவித்து இந்த மோசடிகள் இடம்பெறுவதால், தமது விடுதிகளின் நற்பெயர்களுக்கு களங்கம் ஏற்படுவதாக அதன் உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே பொலிஸார் இவ்வாறான சமூக வலைத்தளங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி, குறித்த சட்டவிரோதச் செயற்பாட்டாளர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விடுதி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-26)

### வாள்வெட்டுச்...

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்தவர் என்றும், அவர் 24 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன், அவரிடம் இருந்து மூன்று வாள்களும் 2 கிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (அ-ம-26)

### படுகொலைகளின்...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமிழர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வாழ்கின்ற நிலையில், செம்மணிப் புதைகுழி விவகாரம் பேசுபொருளாக அமைந்துள்ளது. செம்மணியில் மீட்கப்பட்டுள்ள என்புத் தொகுதிகள் திட்டமிட்ட படுகொலைகளின் சாட்சியங்களாகவே அமைந்துள்ளன. அரசாங்கங்களை இனியும் நம்புவதற்குத் தமிழ் மக்கள் தயாரில்லை. ஆதலால்தான், அவர்கள் செம்மணிப் புதைகுழி உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் சர்வதேசத்திடம் நீதியைக் கோருகின்றனர். இதில் எந்தத் தவறும் இல்லை.

எம்மைப் பொறுத்தவரை செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுக்காக, வெளிநாடுகளில் இருந்து நடைமுறைச் சாத்தியமான நிபுணத்துவத்தைப் பெறுவது மிகவும் அவசியம். ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, செம்மணிப் புதைகுழி தொடர்பில் உள்நாட்டுப் பொறிமுறையை ஏற்கும் நிலையில் உள்ளது. இந்த விடயத்தில், நிபுணத்துவம் மிக்கதும் மிக நேர்மையானதுமான விசாரணைகள் இடம்பெறவேண்டும் - என்றார். (அ-ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்து உரிமையாளர் படுகொலை: நீதிகோரிப் போராடியோர் பிணையில்

புங்குடுதீவில் தனியார் பேருந்து உரிமையாளர் கோரப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு நீதி கோரிப் போராடிய ஐவருக்கு எதிராக ஊர்காவற்துறைப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், ஐவரும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜரான நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பணிப்புறக்கணிப்புக் காரணமாகச் சட்டத்தரணிகள் எவரும் மன்றில் முன்னிலையாகவில்லை. இந்த நிலையில் ஐவரையும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் விடுவித்த நீதிபதி, குறித்த வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு தவணையிட்டார். (ம-66)

காணி விற்பனைக்கு
நல்லூரில் கோவில் வீதியோரமாக
03 பரப்பு காணி விற்பனைக்கு
தொடர்புகளுக்கு:- 077 221 6683
(CS/559603) J-1

காணி விற்பனைக்கு
மயிலிட்டி பிரதேச சபைக்கு மிக அருகாமையில் வீதியோரமாக
75 பரப்பு காணி விற்பனைக்கு.
- பலாலி விமான நிலையத்திலிருந்து 1 கி.மீ தூரம்.
- மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலிருந்து 2 கி.மீ தூரம்.
- பண்ணைகள், தொழிற்சாலைகள், விவசாயத்தேவைகள்,
தோட்டம் செய்வதற்கு மற்றும் வர்த்தக தேவைகளுக்கு மிக உகந்த இடம்.
தொடர்புகளுக்கு:-
077 221 6683
(CS/59604) J-1

# போராட்டத்தைக் கைவிட்டனர் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

கொழும்பு, ஒக்.8

பதில் கடமைக் கொடுப்பனவு கோரி, அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தினர் முன்னெடுக்கவிருந்த போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

பதில் கடமை கொடுப்பனவு வழங்காத கிராம அலுவலர் பிரிவுகளின் கடமைப் பொறுப்புகளிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமையுடன் விலகுவதாக கடந்த வாரம் அறிவித்திருந்த நிலையில், பணிப்பாளர் நாயகத்துடன் இடம்பெற்ற சந்திப்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதன்போது பதில் கடமைக் கொடுப்பனவுகள் உடனடியாக வழங்கப்படும் என்று அவர் உறுதியளித்ததைத் தொடர்ந்து தற்காலிகமாக போராட்டத்தைக் கைவிட்டுள்ளோம் என்று அதன் செயலாளர் கு. சசிகலாத் தெரிவித்துள்ளார்.

உறுதியளிக்கப்பட்ட பதில் கடமைக் கொடுப்பனவுகள் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுமானால், மீண்டும் நாடளாவிய ரீதியில் தாய்ச்சங்கத்தை இணைத்து போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## பளைப் பிரதேச நூலகங்களில் இலவசமாக அங்கத்துவம்

பளை, ஒக் .8

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் பொது நூலகங்களில் வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்குடன் இலவசமாக அங்கத்துவம் வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புலோப்பளை, முள்ளிப்பற்று, முகமாலை ஆகிய பொது நூலகங்களில் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை உரிய படிவத்தினைப் பெற்று அங்கத்துவத்துக்கு விண்ணப்பித்து இணைந்துகொள்ளலாம். அத்துடன் புலோப்பளை பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளாக போட்டிகள் நடத்துதல், நூலக நடமாடும் சேவை ,சஞ்சிகை வெளியீடு உள்ளிட்ட 12 செயற்பாடுகள் மேற்கொள்ளவுள்ளதால் பிரதேச வாசகர்களைப் புலோப்பளை பொதுநூலகத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25.9)

## பப்புவாவில் நிலநடுக்கம்

பப்புவா நியூ கினியாவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்றும், ரிக்டர் அளவுகோலில் 6.8 அலகாக இந்த நிலநடுக்கம் பதிவானது என்றும் அமெரிக்க புவியியல் ஆய்வகம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும், பின்னர் அந்த எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது. (ம)

மரண அறிவித்தல்



ஐயாத்துரை சரவணபவானந்தன்

(பெரியானந்தம் - லொறி)

மட்டுவில் வடக்கு, சிவன்கோவில் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சரவணபாவனந்தன் அவர்கள் கடந்த 05.10.2025 ஞாயிற்றுக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கவிதா (லண்டன்), துசிதா (அவுஸ்திரேலியா), சுமித்திரா (லண்டன்), தர்சிகா (பிரான்ஸ்), சிவதர்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரூபாகரன், துசிகரன், சயரூபன், சாயிஷங்கர் ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜின், அருண், கபிஷ்னா, அனிஷ், சஞ்சய், யஸ்மின், சற்வின், திர்வான், விஹானா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், முத்தம்மா காலஞ்சென்ற சந்திரசேகரன் ஆகியோரின் அன்பு சகோதரனும், பேரின்பநாதன் (சுவிஸ்), யோகராசா (சுவிஸ்), நடராசா, சறோஜினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டையடி தூவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 19.05.1946
மறைவு 05.10.2025

மட்டுவில் வடக்கு,
சிவன் கோவில் வீதி,
சந்திரபுரம், சாவகச்சேரி
075 84 64 395, 077 48 02 662

தகவல்:
குடும்பத்தினர்.
(CS/59601) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] 361 [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 08.10. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org